# திராவிடநாடு



# முகப்பில்...

கெம்பீரமும் கவர்ச்சிகரமும் கொண்ட தோற்றமுடைய, சவுதி அரேபியா மன்னர் இபின்சவுத்! மணற்காடு—பேரிச்ச மரங்களும் அதன் அருகே உள்ள நீரூற்றுகளும் அவைகளை நாடிச்செல்லும் ஒட்டகப் பிரயாணிகளும்—என்று இருந்துவந்த சவுதி அரேபியா இன்று உலகப் புகழ் பெற்று வருகிறது. மன்னர் இபினசவுதின் திறமையான பரிபாலனம், நாட்டின் நிலையை வெகு வேகமாக நேர்த்தியானதாக்கி வருகிறது.

இபின் சவுதின் தகப்பனார் தம் ஆற்றலால் கண்ட இந்த அரசு, கண்டோர் வியக்கும் வேகத்தில் வளர்ச்சி அடைந்து, இப்போதுள்ள மன்னருடைய அறிவாற்றலைத் துணைகொண்டு, சீரும் சிறப்பும் பெற்று வருகிறது.

உலகில் எந்தக்கோடியில் உள்ள முசுலிமுக்கும், புண்ய பூமியாக இருக்கும் இந்த நாடு, மெக்கா-மெதீனு எனும் புனிதபுரிகளைக்கொண்டு, பெருமை அடைகிறது.

ஆண்டுதோறும் பல இலட்சம் முசுலீம்கள் — இங்கு கூடித் தொழுகை நடத்தும் காட்சி, இஸ்லாத்துக்கு உள்ள மகிமையை விளக்குவதாக இருக்கிறது.

மன்னர் இபின்சவுத், உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவர். வள்ளற்றன்மை நிறைந்தவர். தமது பரிபாலனத்தினால் சவுதி அரேபியா நாட்டு மக்கள் அனைவருமே சுக வாழ்வு பெறவேண்டும் என்ற பெரு நோக்குகொண்டவர்.

பாலைவனம் என்று இந்தப் பகுதியைப் பரங்கியர் இகழ்ந்து பேசிய காலம் ஒன்று உண்டு.

இன்றோ, பரங்கியர் உலகுக்கு நாகரிகம் தரும் யந்திரத்துக்கே, இந்தப் பாலைவனம் சொரியும 'எண்ணெய்'தான் தேவைப்படுகிறது. சவுதி அரேபிய, எண்ணெய்க் கிணறுகள் நாட்டின் நிலைமையையே மாற்றிவிட்டது.

செல்வம் கொழிக்கும் நாடாக சவுதி அரேபியா மாறிக்கொண்டு வருகிறது.

அராம்கோ எனும், அமெரிக்க கம்பெனி, இந்த எண்ணெய்க் கிணறுகளை நிர்வகித்து வருகிறது.

குத்தகைத் தொகையாக, சவுதி அரேபியா ஆண்டுதோறும் பெரும் பணம் பெற்றுவருகிறது

மன்னர் இபின்சவுத் இந்தத் தொகையைச் செலவிட்டு, நாட்டுக்குத் தேவையான நவீன வசதிகளைச் செய்து தருகிறார்.

சவுதி அரேபியா, புராதனப் புகழின் இருப்பிடமாக, புண்ய ஸ்தலமாக இருப்பதுடன், இன்று அராபியர்களின் 'ஜீவ பூமி'யாகி வருகிறது.

இதனினும் பெரிய நாடுகள் இருப்பினும், மன்னர் இபின்சவுதிடம் அராபிய நாடுகள் அனைத்தும், மிகுந்த பற்றும் மதிப்பும் காட்டி வருகின்றன.

## அட்லிக்கு
### கார்ப்பரேஷன் வரவேற்பு

★

சென்னைக்கு வரும் அட்லி தம்பதிகளுக்கு (அக்டோபர் 15-ல்) சென்னை கார்ப்பரேஷன் வரவேற்பு அளிக்க இருக்கிறது.

நவீன வசதிகளைத் தேடிப் பெறுமலே, பல தலைமுறைகள் வாழ்க்கை நடத்திவிட்ட இந்த மக்களுக்கு இப்போது மன்னர், இரயில்வே வசதியும், புதிய முறை கல்விக் கூடமும, பாதை அமைப்பும், வாணிப வழிகளும் தந்திருக்கிறார்.

சவுதி அரேபியாவில் 1951ல் தான் முதல் இரயில்வே, கட்டப்பட்டது.

பாலைவனத்திலே பாதை அமைத்து, இரயில்வே ஓடச் செய்வதற்கு, உலகப் புகழ் பெற்ற என்ஜினியர்கள் பலர் அரும்பாடு பட்டனர்.

இந்த இரயில்வே ஏற்பட்டதால், சவுதி அரேபியாவின் ஒரு கோடியிலிருந்து மற்றோர் கோடிக்கு, நூற்றுக் கணக்கான ஒட்டகங்களின் மீது சாமான்களை ஏற்றிக்கொண்டு, கொல்லும் கொதிப்பும், பீதி மூட்டும் பேய்க்காற்றும் கொட்டுவதைத் தாங்கிக்கொண்டு, இருபது நாட்கள் செல்ல வேண்டிய நிலையிலிருந்த வணிகர்கள், இப்போது, சிரமமின்றி, இலாபகரமாக வாணிபம் நடத்த முடிகிறது.

ஏழை மக்களின் வாழ்க்கைத் தேவைகள் எளிதில் கிடைக்கிறது.

சவுதி அரேபிய மன்னர், இரயில் வேக்களை, அரபு மக்களே நடத்தப் பழகிக்கொள்ள வேண்டும் — எப்போதும் அன்னியருடைய ஆதிக்கத்திலேயே இரயில்வே இருந்துவிடும் ஆபத்து நேரிடக் கூடாது என்பதற்காக, இப்போதே அரபிய இளைஞர்களுக்கு அதற்கான பயிற்சி அளிக்கும் தொழிற்கல்விக் கூடங்களை அமைத்து வைத்திருக்கிறார்.

இபின் சவுத் மன்னரின் விருந்தினராக, நேரு பண்டிதர் இந்தத் திங்கள் சென்றிருந்தபோது, மன்னர் தந்த உற்சாகமான உபசரிப்பு, அவருடைய பெருங் குணத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு.

நவீன அரசியல் முறைகளான, தேர்தல், சட்டசபைகள் — என்பவைகள் இல்லை-பழயகால முறைப்படி ஊர்ப் பெரியவர்கள் கூடிக் கலந்து பேசித்தான், ஆட்சிக்குத் துணைபுரிகின்றனர். எனினும் மன்னருக்கு மக்களிடம் உள்ள அன்பின் காரணமாக, நல்ல பலன்கள் கிடைத்துக்கொண்டு வருகின்றன.

"கொடை கொடுக்கும் கையான்" —என்ற வாக்கு முற்றிலும் பொருத்தமானவராக மன்னர் இபின் சவுத் இருந்து வருவதுடன், தமது ஆட்சியின்போது, மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்று கருதும் கனிவான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்.

அந்தக் கனிவும் கெம்பீரமும், அவர் தோற்றத்திலேயே காணலாம்.

★

# எதிர்க்கட்சி

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [14-10-56] தனிப் பிரதி 2 அணா [ இதழ் 15

நாட்டுக்கு நல்லாட்சி தேவையென்ருல், எதிர்க்கட்சி என்ற ஒன்று இருக்கவேண்டும்.

சர்வாதிகார நாடுகளிலே தவிர, மற்ற எங்கும், ஆளும் கட்சியாக ஒன்றும், அதன் போக்கைக் கண்காணித்திட வும், திருத்தவும், அதன் போக்கு கெட்டுவிட்டதென்ருல், துரத்தவும் வல்லமை பெற்று, எதிர்க்கட்சியும் உள்ளன.

இந்த முறையினுலேயே, ஆட்சியில் உள்ளவர்கள் எதேச்சாதிகாரிகளாகிவிடாமலிருக்கும் பாதுகாப்பு கிடைக் கிறது; தீட்டப்படும் திட்டங்கள்குறித்து மக்களிடம் கருத்து விளக்கம் தரப்பட்டு, மறுப்பும் கொடுக்கப்பட்டுவருவதால், பொதுமக்களின் விழிப்புணர்ச்சி பதமாகிறது, அரசியல் பிரச்சினைகளை அலசும் வாய்ப்பும், அதன்மூலம் ஆட்சியின் போக்கை உருவாக்கும் திறனும், கிடைக்கிறது.

இந்தச் செல்வம் வற்ருமல், வளர்ந்தவண்ணம் இருக்கவேண்டும்—ஜனநாயகத்தின் தரம் கெடாமலிருக்க அதுதான் சரியான வழியாகும்.

எதிர்க் கட்சி—என்பதற்கு இந்த அடிப்படைக் கடமை இருப்பதுடன், நாட்டு நிலைமையை எப்படி எப்படி ஆக்கி அமைப்பது என்பதற்கான கருத்துகள் — கொள்கைகள் வேறு இருந்தாகவேண்டும்.

எதிர்க் கட்சி என்ற முறையில், ஆளும் கட்சி எதேச் சாதிகாரம் செய்யாமல், மக்களை ஏய்த்துவிடாமல், பாது காப்பு அளிக்கும் பொறுப்பை மேற்கொள்கிறது; அதே போது, ஒரு கட்சி என்ற முறையில், நாட்டு நடவடிக்கை, சமுதாய அமைப்பு, ஆட்சிமுறை, ஆகியவைபற்றிச் சில திட்டவட்டமான கொள்கைகளைக் கொண்டிருக்கிறது.

இந்தக் கொள்கைகளைக் கெடுத்துக்கொள்ளாதபடி யும் பார்த்துக்கொண்டு, ஆட்சி வாய்ப்பைக்கொண்டு, நாட் டுக்குக் கேடான செயலில் ஆளும் கட்சி ஈடுபட்டுவிடாத படி தடுத்திடும் காரியத்தையும், கவனித்துக்கொ[illegible] வேண்டியது, எதிர்க்கட்சியின் கடமை.

தான் வலியுறுத்தும் கொள்கை, நாட்டு மக்க[illegible] பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை கிடைக்[illegible] வரையில், எதிர்க்கட்சியாக இயங்குவதும், ஆட்சிப்பொ[illegible] பேற்கும் வாய்ப்பு தரப்படும் காலத்தில், தான் ஏற்கன[illegible] வலியுறுத்திவந்ததும், மக்களின் ஆதரவினைப் பெற[illegible] மான கொள்கைகளை நிறைவேற்றி, அதன்படி, நா[illegible]டு நடப்புகளை உருவாக்குவதும், இயலும்.

எனவே எந்த எதிர்க்கட்சிக்கும், உடனடி [illegible] என்று ஒரு பகுதியும், நீண்டகால வேலை என்ற மற்[illegible] பகுதியும், இருந்தவண்ணம் இருக்கிறது.

ஜனநாயகம் என்பதே, சராசரி அறிவுள்ள எவரு[illegible]ம், வாய்ப்பு அளிக்கப்பட்டால், சிந்தித்தும், கலந்து பேசி[illegible]ம், கூடிப் பணியாற்றி; நாட்டு ஆட்சியை நடத்த முடியும் என்ற நம்பிக்கையின் மீதுதான் கட்டப்பட்டிருக்கிறது.

இதனை மறுப்போர், இருவகையினர் உள்ளனர் என்று கூறலாம்.

(1) மேதா விலாசம் என்பது ஓர் வரப்பிரசாதம்; அது புண்ணியவசத்தால் சிலருக்கு மட்டும் கிடைக்கும்; அப்படி புண்யம் பெற்றவர்கள் அரசர்கள்; அவர்கள்தான் ஆளத்தக்க வர்கள்.

(2) பொதுவாக மக்களில் பெரும்பாலோர் ஏமாளி கள், எதையும் எண்ணிப்பார்க்கும் திறன் அற்றேர்; அயோக்கியர்களிடம் ஏமாந்து விடக் கூடிய சோணகிரிகள். எனவே அவர்கள், அறிவாற்றல் படைத்த ஒரு வல்லானின் ஆட்சிக்குத்தான் அடங்கி இருக்கவேண்டும்.

இந்த இருவகையினரில், முதல் வகையினர், ஏறத் தாழ மூலைக்குச் சென்றுவிட்டனர் என்று கூறலாம்; இரண் டாம் வகையினர், ஜனநாயகத்தின் மாண்பு குலையும் நேரத்திலும் இடத்திலும் தலை தூக்குவர்; பிற இடத்திலும் நேரத்திலும், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியா மல், சங்கட நிலையில் தவித்து உழல்வர்.

இப்போது, பல்வேறு முனைகளிலிருந்து, பல்வேறு காரணங்களைக் காட்டி, எதிர்க் கட்சி வேண்டும் — என்று பேசுகின்றனர்.

நட்பு காரணமாகவும், நம்பிக்கிடக்கிருரே, அவரை எப்படி நட்டாற்றில் விடுவது என்ற காரணத்துக்காகவும். பெரியார் இன்று காமராஜர் ஆட்சிக்கு எதிர்ப்பு கூடாது என்கிருரே தவிர, அவரே, கடந்த 20 ஆண்டுகளாக ஒரு பலம் வாய்ந்த எதிர்க்கட்சி அமைக்க அரும்பாடுபட்டுப் பார்த்தார்.

என்ன காரணமோ,-யார் யார் மீது குறை காணுவது என்பதிலேதான் விவாதம் இன்னமும் நீடிக்கிறது— பெரியார், பலருடைய கூட்டுறவை — தோழ மையை—இழந்துகொண்டு இருப்பது, தமிழக வரலாற் றிலே ஓர் சோகக் கதையாகவே இருந்து வந்திருக்கிறது.

ஜாக்கி இல்லாவிட்டால் ஜோக்கர்—மணிலா இல்லா விட்டால் எட்டு—என்று இப்படி, அவர், கிடைக்கிற 'சீட்டு'களை வைத்துக்கொண்டு, 'சீட்டு' ஆடுவதிலே, தன் னிகரற்ற சமர்த்தர்—அது அவருடைய சாமர்த்தியத்தைக் காட்டுவதேயன்றி, சீட்டுகள் சரியானவையாக உள்ளன என்பதைக் காட்டுவனவாக இல்லை.

[18-ஆம் பக்கம் பார்க்க]

காஞ்சீபுரம்

14—10—'56

தம்பி !

**நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம், குற்றமே!**

[illegible] திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், மான் மழுவேந்திய மகேசன், மாலும்
அயனும் தேடித்தேடிப் பார்த்தும் அடியும் முடியும் கண்டறியவொண்ணாதபடி
அண்டசராசரமனைத்துமாய் நின்ற அரன், உமையொரு பாகன், சிறுபொறி கிளப்பிச்
சிதறினாலே எதிர்ப்பட்டதனைத்தையும் சாம்பலாக்கிடத்தக்கதான 'சம்ஹார சக்தி'
படைத்த நெற்றிக்கண்ணைக் காட்டினார்—ஏடும் எழுத்தாணியுமின்றி பிறிதோர் பல
மற்ற நக்கீரன் எனும் பெரும்புலவர், ஐயனே! யார் நீவிர் என்பதனை
அறிந்தேன், எனினும் அச்சம் காரணமாகவோ பக்திக்குக் கட்டுப
பட்டோ, என் நெஞ்சார உணர்ந்ததை எடுத்துரைப்பதை விட்டு விடு
வேன் என்று மட்டும் எண்ணாதீர், **நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே!**
என்று எடுத்துரைத்தாராம்.

தமிழர் பங்கமுறுமல் சங்கம் வளர்த்து, சான்றோராய், ஒழுகி வந்த
நாட்களில், தமிழ்ப்பெரும் புலவர்களின் மனவலிவு எத்துணை ஏற்றமுடையதாக
இருந்தது என்பதனை எடுத்துக்காட்ட, நக்கீரன் நெற்றிக்கண்ணைக் காட்டினும்
குற்றம் குற்றமே என்று அஞ்சாது எடுத்துரைத்த காதையைக் கூறுவது, இப்
போது, ஏறத்தாழ மேடை மரபு ஆகிவிட்டது.

தமிழன் எதற்கும் அஞ்சமாட்டான், மனதிற்குச் சரியெனப்பட்டதை, எவர்
குறுக்கிட்டாலும், உருட்டி மிரட்டினாலும் எடுத்துரைக்கத் தயங்கமாட்டான், என்ப
தற்கான எடுத்துக்காட்டாக நக்கீரன் விளங்குவது போல், பிறமொழியாளர்களிடம்
காதைகள் உள்ளனவா என்பதுகூட ஐயப்பாடுதான்.

தமிழரின் அஞ்சா நெஞ்சினையும், தயாபரனின் உருட்டல் மிரட்டல் வேலையை
யும் விளக்கிடப் பயன்படுத்தப்படும் இந்த நக்கீரம், பெண்களின் கூந்தலுக்கு இயற்கை
மணமா, செயற்கை மணமா என்ற பிரச்சினையை ஒட்டிப் பிறந்தது.

செயற்கையில்தான் மணம் என்பது நக்கீரன் வாதம்.

இல்லை, இயற்கை மணம் உண்டு என்பது இமயவன் இயம்பிய வாதம்.
நக்கீரனுக்கு நெஞ்சில் நடுக்கம் இல்லை—புலமை வலிவளித்தது.

உள்ள படைகள் உருக்குலைந்து ஓடிடக் கண்டான பிறகு மூலபலப் படையின்
துணையை நாடும் முறைப்படி, சிவனார், புலமைக்கு உரிய வாதங்கள் பயன்படாமற்
போன பிறகு, மூலபலம் காட்டும் நோக்குடன், ஏ! ஏடு தூக்கியே! எம்மை யார் என்று
காண்பாயாக! என்று எடுத்துக்கூறி, மடக்கிடும் முறையில், நெற்றிக்கண்ணைக்
காட்டினார்.

# நெற்றிக் கண்ணைக் காட்டினும்....!

கண்டேன், கண் மூன்றுடையோனே!, கண்டேன்! எனினும் குற்றம் குற்றமே என்று துணிந்துரைத்தார், நக்கீரர் எனும் பெரும் புலவர்.

தமிழர் இதனை மேடைமரபு ஆக்கிக்கொள்ளும் அளவுக்கேனும் ஆர்வம் இழந்திடாமல் உள்ளனரே என்பதிலே மகிழ்ச்சி கொள்ளத்தான் வேண்டும்.

எனினும், என் மகிழ்ச்சி ஒன்றுக்குப் பத்தாகி, என் உள்ளத்தில் களிப்புக் கொந்தளிக்கும் நிலைக்குக் கொண்டு செல்லும் ஓர் நிகழ்ச்சி, சின்னாட்களுக்கு முன்பு நடைபெற்றது—பெரும்புலவனும் **நக்கீரன்பற்றி காமராஜர் பேசினார்!**

ஆமடா, தம்பி, ஆமாம்! நக்கீரன் பற்றி காமராஜர் பேசினார்!!

தமிழன் இனி தலைநிமிர்ந்து நிற்கலாம், தோள்தட்டி ஆடலாம். பள்ளுப்பாடி மகிழலாம்; காமராஜர், மாநில முதலமைச்சர், சங்கம் புகழ விளங்கிய சான்றோராம் நக்கீரனார் குறித்துப் பேசிடவும், அதனை நாட்டுமக்கள் கேட்டு இன்புறவுமானதோர் நற்காலம் பிறந்துவிட்டதே என்றுகூட ஒருகணம் எண்ணினேன்—மறுகணமோ...!

நக்கீரர்போலக் குற்றம் குற்றமே என்று எடுத்துக்கூறும் பண்பு பாராட்டத்தக்கது, அது வளர வேண்டும் என்று பேசுகிறாரா என்றால், அதுதான் இல்லை!

உன் புருஷனோடுதான் நீ எப்போதும் சரசமாடுவாயே, இன்று என்னோடு கொஞ்சம் சிரித்துப் பேசேன் என்று கேட்கும் பாவனையில், நக்கீரர் குறித்துச் சுட்டிக் காட்டிய காமராஜர், அவர்போல அஞ்சா நெஞ்சுடன், தவறு எத்துணை பெரிய இடத்தவர் செய்தாலும் கலங்காமல், அஞ்சாமல், குற்றம் குற்றமே என்று எடுத்துக் கூறுக என்று பேசாமல், நக்கீரர் பரம்பரை என்றுகூறிக்கொள்கிறீர்களே, உங்களுக்கு ஏன் வடநாட்டினிடம் பயம், வடநாடு ஆதிக்கம் செலுத்தும் என்று ஏன் பயப்படுகிறீர்கள்? வடநாடுதான் ஆதிக்கம் செலுத்தட்டுமே? என்று பேசுகிறார்.

இதிலே, அவர் காட்டும் தெளிவு இருக்கிறதே அதைக் கண்டு அகில உலகும் அதிசயிக்கும்!

முதுகின் மீது யார் ஏறி அழுத்தினாலும், வாய் திறவாமல் இருப்பதுதான் நக்கீரர் பரம்பரையின் போக்காக இருக்கவேண்டும் என்று கருத்துரை அளித்திட, காமராஜரால் தவிர வேறு ஒருவரால் முடியாது. நிச்சயமாக முடியாது.

சிவபெருமான் என்று தெரிந்த பிறகும், நக்கீரர் அஞ்சாமல் தமது எதிர்ப்பை, மறுப்பைத் தெரிவித்தார்.

அதே முறையிலேதான், சுட்டுச் சாம்பலாக்கவல்ல சக்தியைப் பெற்றவர் நேரு பெருமகனார் என்று தெரிந்தும், அந்தச் செயலில் அவருடைய துரைத்தனம் இந்த எட்டாண்டுகளிலே, நிரம்பப் பயிற்சியும் பெற்றுவிட்டது என்பதை அறிந்தும், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று எடுத்துரைக்கும் துணிவும், தமிழ் மரபு இதுதான் என்பதைக் காட்டிடும் போக்கும், முன்னேற்றக் கழகத்திடம் இருக்கிறது. இதைக் கண்டு பெற வேண்டிய கருத்தைப் பெறாமல், அப்படிப்பட்ட நக்கீரர் வழி வந்தவர்கள், வடநாட்டுக்குப் பயப்படுவானேன் என்று வக்கணை பேசுவதற்குத் தேவையான சிறுமதியைப் பலர் பெற முயன்றாலும் முடியாது. நமது மாநில முதலமைச்சருடன் இதில் போட்டியிட எவராலும் இயலாது.

எனினும் எனக்கோர் மகிழ்ச்சி—கனியைப் பறித்து குறும்புக்காக மந்தி வீசினாலும், கனி கிடைப்பது நல்லதல்லவா! அதுபோல, தவறாகப் பயன்படுத்துகிறார் என்றபோதிலும், காமராஜர், தமிழகம் தாழ்ந்திடாமல் இருந்த காலத்துச் 'செய்திகளை' மேலும் மேலும் தெரிந்துகொள்வது, நல்லது என்று எண்ணவேண்டி இருக்கிறது.

நக்கீரர், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறியதும், என்னே இவர் தம் அஞ்சாமை! என்று வியந்து வெண்மதி சூடியோன், அவரை வாழ்த்தினான் என்று கதை இல்லை. வெந்தழல் நக்கீரர் உடலைப் பற்றிக்கொண்டதன்னதோர் நிலையை மூட்டிவிட்டார் என்றும், பின்னர் அப்பெரும் புலவர் திருமுருகாற்றுப்படை பாடி உய்வு பெற்றார் என்றும்தான் திருவிளையாடல் குறித்து உரைக்கின்றனர்.

எனவே, நக்கீரர் காலத்திலும் சரி, அஞ்சா நெஞ்சனைப் போற்றிட ஒரு சிலரே உளர் என்று கூறத்தக்க இக்காலத்திலும் சரி, நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறும் போக்கினை, மேலிடத்தில் அமர்ந்தவர்கள் பாராட்டுவது கிடையாது—பகைதான் பெருநெருப்பாகும்.

நக்கீரர் கதியே இதுவாயிற்று—உண்மையைச் சொன்னதற்காக உழல நேரிட்டது. அதுவும் உமாநாதனின் உக்கிரத்தினால் என்று கண்ட பிற்காலத் தமிழர்கள், ஒற்றைக்கண்ணனாக இருந்தாலும்கூட அவன் ஊராளும் நிலைபெற்றான் என்றால், அடங்கவும் ஒடுங்கவும், ஆமையாகவும் ஊமையாகவும் தாழ்ந்து போயினர். எனவே எதைச் சொன்னாலும் சரி என்று ஏற்றுக்கொள்ளும் பாவனைப் பணிவும், கோழை உள்ளமும் ஏற்பட்டுவிட்டது; அதன் விளைவாகவே இங்கு ஆரியம் நுழையவும், பிறகு ஆங்கிலேயர் அரசாளவும் இன்று வடவர் கொட்டமடிக்கவுமான கோணல் நிலை ஏற்பட்டது; இதை நாட்டுமக்களுக்கு எடுத்துக் கூறிடும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்; காமராஜரோ, நாவடங்கிக் கிடவுங்கள் என்று புத்தி கூற நக்கீரர் கதையையே பயன்படுத்தப் பார்க்கிறார்.

போகட்டும் இதற்காகவேனும், இவர், நக்கீரர், கபிலர், இளங்கோ போன்றார்பற்றி அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைப்பது குறித்து நான் உள்ளபடி மகிழ்கிறேன்.

**'முதியோர் கல்வி'யில் பலவகை உண்டு; அதில் இது ஒருவகை என்றெண்ணி மகிழ்கிறேன்.**

பெறவேண்டிய 'பாடம்' துவக்கத்தில், கிடைக்காற்போயினும், தமிழகம் கொண்டிருந்த புலமையும், கோலோச்சிய தன்மையும், பெற்றிருந்த வளமும், பின்னர் அதனை இழந்ததன் காரணமும் அறிந்திடவும், அறிந்ததன் பலனாகவே, மீண்டும் தாழ்ந்த தமிழகம் எழுச்சி பெறுவதற்கான திட்டம் காணவேண்டும் என்று எண்ணவும், உள்ளத்தில் ஆவல் அரும்பும்! இது என் நம்பிக்கை.

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே!—என்று கூறிடும் அளவுக்கு நெஞ்சு உரம், தமிழகத்தில் இருந்துவந்தது; காமராஜர் அறிந்து உரைக்கும் அளவுக்கு, அந்தக்காதை நாட்டிலே சர்வ சாதாரணமாகிவிட்டுமிருக்கிறது — எனினும்; அத்தகைய

அமிழகத்தில், காணக் கிடைக்கும் எல்லா வகையான ஆதாரங்களையும் கொண்டு பார்க்கும்போது, தேவிகுளம் பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழகத்துக்குத்தான் உரிமையான உடைமைகள் என்பது தெரிந்திருந்தும், அதனை தேசியப் பாசம் குன்றுமுறையிலும், தெளிவு தெரியும் வகையிலும் எடுத்துக் காட்டியும், டில்லி ஏற்க மறுத்தபோது அதுபோது, நக்கீரம் பேசும் இந் நற்றலைவர் செய்தது என்ன? தமிழரின் உரிமையை மறுப்பவர், எவராயினும், எத்துணை ஏற்றம் பெற்றோராக இருப்பினும், கொற்றம் கொண்டு அதனையே கொடுமைக்குக்கருவியாக்கிக்கொண்டோராக இருப்பினும், நான் பணிந்திடுவேன் அல்லேன், பணிந்திடுதல் பண்புமல்ல, தமிழ் மரபுமாகாது, என்று சீறிக்கிளம்பினர்!

தேவிகுளம் போனாலென்ன
வாவி குளம் வந்தாலென்ன
வாஞ்சனை போதுமய்யா, நேருவே!
வாய்திறவேனே, மெய்யாய்!

என்று கண்ணி பாடிக் கிடந்திட்டாரே! இப்படிப்பட்டவர்களிடம் தமிழகம் சிக்கிய பிறகுதான், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறிடும் உள்ள உரம் உருக்குலைந்தது, எடுப்பார் கைப்பிள்ளைகளும், எனக்கென்ன பங்கு என்று கேட்பவர்களும் கொலு வீற்றிருக்கத் தொடங்கினர், கோல் சாய்ந்தது, கோலம் கலைந்தது, ஞாலம் புகழ வாழ்ந்த தமிழர், நாமம் மட்டும் தமிழரெனப் பெற்று வாழ்ந்திடும் அவலம் பிறந்தது, அவதி மிகுந்தது.

எனவேதான், இது காலை தமிழரின் பண்டைய பெருமையினை எடுத்துக்காட்டியேனும், ஓர் புது எழுச்சி காணலாமா என்று தம்பி, நாமெல்லாம் எண்ணுகிறோம்.

தமிழ் இனம், பண்பு கெடாத நாட்களில் பாராண்ட பாங்குபற்றி, படிக்குந்தோறும் படிக்குந்தோறும் பாகெனச் சுவை அளித்திடும் பாக்களைக் காண்கிறோம், பெருமூச்செறிகிறோம்.

**கோடும் குவடும் பொரு தரங்கக்**
**குமரித் துறையில் படு முத்தும்**
**கொற்கைத் துறையில் துறை வாணர்**
**குவிக்கும் சலாபக் குவால் முத்தும்**
**ஆடும் பெருந்தண் துறைப் பொருனை**
**ஆற்றில் படுதெண்ணிலா முத்தும்**
**அந்தண் பொதியத்தடஞ்சாரல்**
**அருவி சொரியும் குளர் முத்தும்!**

என்று பாடுகிறார்கள் — உன் தமிழகம் முத்தும் மணியும் ஒளி தர விளங்கிய உயிரோவியம்என்பதனை அறிந்திடுக! என்று புலவர் பெருமக்கள், பொருளுரையும் பொழிப்புரையும் கூறுகின்றனர் — பழிப்புரை கேட்டும் பதைத்திடாதார் பரிபாலனத்திலே உள்ளோமே! முத்து கூத்தாடுமாமே முந்தையர் நாட்களில், வறுமை முடைநாற்ற மன்றோ தூளைக்கிறது என்று எண்ணுகிறோம், ஏங்கித் தவிக்கிறோம்.

“குன்றின் இள வாடை வரும் பொழுதெல்லாம்
மலர்ந்த திருக்கொன்றை நாறத்
தென்றல் வரும் பொழுதெல்லாம் செழுஞ்
சாந்தின்
மணநாறும் செல்வ வீதி...”

என்று கூறுகிறார் புலவர்— தமிழகத்தின் புகழ் மணம், கமழ்ந்திருந்த அந்த நாட்கள் நினைவிற்கு வருகின்றன. அந்தச் ‘செல்வவீதி’களிலே இன்றுதேம்பித்தவித்தும், திண்டாடித் திகைத்தும், உழைத்துஉருக்குலைந்தும், பிழைப்பிற்கு வழி காணாது புலம்பியும், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் கிடைக்காததால், இழிநிலை பெற்றும், தமிழர் உழல்கின்றனரே!

குன்றிலிருந்து கிளம்பும் காற்றும், ஊருக்குள் செல்கிறோம், மக்களுடன் உறவாடி மகிழச் செல்கிறோம், செல்லுங்காலை, எமைக் காண வந்த இளங்காற்றே! எமக்களிக்க எது கொணர்ந்தனை? என்று கேட்டிடின் என்ன செய்வது என்று எண்ணிப்போலும் மலர்ந்த கொன்றையின் மணத்தை வாரிக்கொண்டு வந்து தருகிறது; இளவாடை! தென்றல் வீசும் போது, இனியதோர் குளிர்ச்சி மட்டுமா! அந்தத் தென்றல் தமிழகத்தில் வீசுகிறதல்லவா, தமிழர், தென்றலுக்கே வாசம் அளிக்கின்றனர் — செழுஞ்சாந்தின் மணம் பெறுகிறது தென்றல்! இவ்விதமெல்லாம் இருந்த ‘செல்வ வீதி’களிலே இன்று காண்பது என்ன? இன்றைய நிலையை எண்ணி எண்ணி ஏக்கமுறும்போது, எதிரே வந்து நின்று காமராஜர், “ஓலமிட்டுக்கிடப்பானேன் — நீதான் நக்கீரன் பரம்பரையாயிற்றே!” என்று கேலி பேசுகிறார். தமிழகம் எத்துணை தாழ் நிலையில் இருக்கிறது என்பதற்கு நான் ஓர் நடமாடும் சான்று என்று கூறிக்கொள்கிறார்!!

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற நெஞ்சுறுதி கொண்டோராகத் தமிழர் இருந்த நாட்களில், சிங்களம், புட்பகம், யவனம், சீனம், சோனகம், வங்கம், மகதம், கலிங்கம், காந்தாரம், காமரூபம்—எனும் எண்ணற்ற நாடுகள் பலவும், தமிழகத்தின் திருவைக் கண்டு வியந்தன, திறனைக் கண்டு அஞ்சின, செருமுனைக்கு வர பயந்தன, தோழமைக்குக் காத்துக் கிடந்தன! இமயம் தொட்டு நின்ற அரசுகள் அனைத்தும் தமிழர் முரசு கொட்டுகின்றனர் என்று அறிந்தால், தமது அரசுகட்டில் ஆடிட அச்சம் கொண்டனர்.

கலிங்கத்துப் பரணி இதனைக் காட்டி நிற்கிறது.

கனக—விசயர் காதை இதனை அறிவிக்கிறது.

கடாரம் கொண்டான், கங்கை கொண்டான், இமய வரம்பன்-என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் உள்ளன — ஒவ்வொன்றும் ஒவ்வோர் வீரக் காதையை விளக்குவன!

அவ்விதம் புகழ் பரப்பி வாழ்ந்த தமிழன் இன்று, அடி பணிந்தும், அடிமையாகியும், உரிமை இழந்தும், உதவாக்கரை நிலை பெற்றும், இழிந்து கிடக்கிறானே, இந்த நிலை மாற வழி என்ன என்கிறோம்—காமராஜர், நீதான் நக்கீரன் பரம்பரையாச்சே! உனக்கென்ன குறை! —என்று நையாண்டி பேசுகிறார்.


நையாண்டி பேசட்டும், தம்பி, தாராளமாகப் பேசட்டும், பேசுவதற்காகவேனும், தமிழரின் வரலாற்றுத் துணுக்குகளைக் கேட்டுப் பெறட்டும்—அவை உள்ளத்திலே வந்து புகப்புக, நையாண்டி பேசும் போக்கே கூட மாறிவிடக்கூடும்,

“அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்?
இந்த மாநிலம் முழுதாண்டிருந்தார்
இணையின்றி வாழ்ந்தார் தமிழ் நாட்டு
வேந்தர்”

என்று பண்பாடத் தோன்றும், தமிழகத்தின்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை உடைத்திடாமல், இந்தத் தடந் தோள்கள் எதற்கு என்று கேட்டிடும் ஆற்றல் எழும், தமிழ் அரசு அமையும்!

அந்த நன்னாளைப் பெறுவோம் என்ற நம்பிக்கையுடனேயே, நக்கீரர் காதை காட்டி நையாண்டி செய்யும் காமராஜரை நாம் சகித்துக் கொள்கிறோம்.

அன்பன்,



# மொரார்ஜி விருந்து

—[உண்மை கலந்த கற்பனை]—

**இடம்:-** மொரார்ஜி தேசாய் மாளிகை — கூடம்.

**இருப்போர்:-** மொரார்ஜி தேசாய்
நேரு பண்டிதர்

**நிலைமை:-** நேரு பண்டிதர் வெகு உற்சாகமாகக் காணப்படுகிறார். தூய வெண்ணிறக் கதருடையும், ரோஜா நிற மேனியும் மொரார்ஜியைக் கவர்கிறது. தேசாய் சோகமாக இருப்பது கண்டு, நேரு குத்தலாகப் பேசுகிறார்.

**நேரு:-** *மொரார்ஜி பாய்! இன்னமும், அந்தப் பழைய சோகம், ஏன்? நான் தான் வந்து விட்டேனே இன்னும் என்ன? உம்மிடம் சற்று அதிகமாகவே ரகளை செய்துவிட்டார்கள். அப்படித்தான்! இளைஞர்களின் புரட்சி வேகம் அது. அதைக் கண்டு நாம் கலங்கக்கூடாது—தைரியத்தை இழக்கக்கூடாது—*

**மொரார்ஜிதேசாய்:-** *நேரு பாய்! எனக்குப் பயமும் இல்லை, பீதியும் கிடையாது. என்னுடைய சொந்த மாகாணத்தில், என்னுடைய குஜராத் மக்கள், என்னை அவமானப்படுத்துவது என்றால் சகிக்க முடிகிறதா! அந்தச் சோகம்தான். பயம் ஏன் பிறக்கப் போகிறது! பயல்கள் என்ன பிரன்சுப் புரட்சியா செய்து விடுவார்கள். ஒரு டிவிஷன் பட்டாளத்துக்குப் பதில்சொல்ல முடியுமா பயல்களால்—*

**நேரு:-** *ஆனால், ரொம்ப ரொம்பத் துணிச்சலாக நடந்து கொண்டார்கள்... துரத்தித் துரத்தி அடித்தார்களாமே, கதர்க் குல்லாய் போட்டவர்களையெல்லாம்.*

**மொரார்:-** *அக்ரமத்துக்கு அளவே கிடையாது...எதற்கும் துணிந்து விட்டார்கள்... எந்த அளவுக்குச் சென்றார்கள் தெரியுமோ...? சொல்லவே, வெட்கமும் வேதனையுமாக இருக்கிறது—*

**நேரு:-** *எதைச் சொல்கிறீர்—?*

**மொரார்:-** *தங்களைப் போல உருவம் செய்து, கொளுத்தும் அளவுக்கு—*

**நேரு:-** *(கோபமாக) நிலைமை சென்றிருக்கிறது... இவ்வளவு காட்டுமிராண்டித்தனத்தை வளர விட்டு விட்டீர்.*

**மொரார்:-** *அடக்க நான் எடுத்துக் கொண்ட முயற்சி கொஞ்சமல்லவே! ஊர் அடங்குச் சட்டம் போட்டேன். ஓட ஓட விரட்டி அடிக்கச் சொன்னேன்...*

**நேரு:-** *படுகொலை! அடக்குமுறை! என்று கூக்குரல் கிளம்பி, நமது ஆட்சிக்கு மேலும் வெறுப்பு வளர்ந்தது, வேறென்ன பலன் கண்டோம்.*


**மொரார்:-** *என்னுடைய குஜராத்தில், இப்படி வெறி பிடித்து விடும் என்று...*

**நேரு:-** *அதென்ன, என்னுடைய குஜராத்! மொரார்ஜி பாய்! உமக்கே அந்த வெறி அடியோடு போகக் காணோமே! என்னுடைய குஜராத் என்று சொந்தம் பேசுகிறீர்—பாத்யதை கொண்டாடுகிறீர்... உமக்கே இப்படி இருந்தால், ஏன் வாலிபர்கள் கொதிப்பாகப் பேசமாட்டார்கள்.*

**மொரார்:-** *சும்மா, பழக்கத்தில் என் குஜராத் என்று சொன்னேன்... வேறே ஒன்றும் வித்தியாசமாக எண்ணிக்கொள்ளக் கூடாது...*

**நேரு:-** *(கேலியாக) என் குஜராத்! என் மகாராட்டிரம்... என் பஞ்சாப்! என் வங்கம்! செச்சேச்சே! என்ன பைத்யக்காரத்தனமான பேச்சு! நமது பாரத்! இப்படி அல்லவா தலை நிமிர்ந்து பேச வேண்டும். என் யூ. பி. யில் இப்படிப் பேசமாட்டார்கள்.*

[மொரார்ஜி சிரிக்கிறார். நேரு



பண்டிதர் கோபம் கொண்டு]

**நேரு:-** சிரிப்பு என்ன வேண்டியிருக்கிறது, சிரிப்பு...

**மொரார்:-** பண்டிட்ஜீ! என் குஜராத்—என்று நான் சொல்வது பிசகு என்று பேசிக்கொண்டு வந்தபோது, என் யூ. பி. என்று நீங்களே சொல்கிறீர்களே...

[நேருவும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்]

**நேரு:-** அது ஒரு பழக்கம்... சரி... சரி... அன்று கூட்டத்தில் என்ன நடந்தது? அதைச் சொல்லுங்கள்.

**மொரார்:-** கூட்டம் எங்கே நடந்தது...! கூட்டத்துக்கு நான் சென்றேன், மக்கள் வரவில்லை... கூட்டம் எப்படி நடக்கும்...

**நேரு:-** அவ்வளவு கட்டுப்பாடாகவா, கூட்டத்தை பஹிஷ்காரம் செய்துவிட்டனர்... மொரார்ஜீ! எனக்கு மெத்த வருத்தமாயிருக்கிறது. தங்களிடம் குஜராத்திகளுக்கு எத்தனை பாசம்... எத்தனை காலமாகத் தொடர்பு...

**மொரார்:-** எதையும் எண்ணிப் பார்க்கவே இல்லையே. மகா குஜராத் ஜிந்தா பாத்! மொரார்ஜி தர்பார் மூர்தாபாத்!—என்கிறார்கள்.

**நேரு:-** பாரத் ஜிந்தாபாத்! என்றல்லவா சொல்லவேண்டும்...இருக்கட்டும் இருக்கட்டும்... இன்று மாணவர்களுக்கு நான் புத்திமதி கூறி, நிலைமையைச் சரிப்படுத்தி விடுகிறேன். அவசரக்காரர்கள்! ஆனால், விஷயத்தைச் சொல்ல வேண்டிய பக்குவத்தில் சொன்னால் புரிந்துகொள்வார்கள்.

**மொரார்:-** பேச விட்டால், புரிய வைக்கலாம்... அதுதான், கூட்டத்துக்கே வரவில்லையே...!

**நேரு:-** இப்போது நிலைமை எப்படி?

**மொரார்:-** இப்போது சரியாகி விட்டது... காலித்தனம செய்தவர்களெல்லாம் வெட்கித் தலை குனிகிறார்கள்... உண்ணாவிரதம், நிலைமையைச் சரியாக்கி வைத்திருக்கிறது.

**நேரு:-** இப்போது, மகா குஜராத் மகா கோசல் என்றெல்லாம் எண்ணம் இருக்காது. சூயஸ் பிரச்சினை, அல்ஜீரியா பிரச்சினை, என்னுடைய சவுதி அரேபிய விஜயம் இவைபற்றித்தான் மாணவர்கள் அக்கரையுடன் இருப்பார்கள்...

**மொரார்:-** ஆமாமாம்! சவுதி அரேபியாவில் நீங்கள் கண்ட காட்சிகள், கேட்ட விஷயங்கள், இவைகளைக் கேட்க, வெகு ஆவலாக இருக்கிறார்கள்...

**நேரு:-** பத்திரிகைகளிலே விரிவாகச்செய்திகள் வரவில்லையோ...?

**மொரார்:-** வந்தது! என்றாலும் தங்கள் வாயால் கேட்கவேண்டும் என்ற ஆவல் இருக்குமல்லவா... எனக்கே இருக்கிறதே...!

**நேரு:-** சவுதி அரேபியா விஜயம், ரொம்ப முக்யத்துவம் வாய்ந்தது தான். நான் எத்தனையோ ராஜோபசாரம் பார்த்திருக்கிறேன்—சவுதி அரேபியாவிலே நடந்த உபசாரம், என்னையே மலைக்கச்செய்து விட்டது. அரண்மனையில்தான் தங்கினேன். இதற்கு முன்பு யாருக்கும், சவுதி அரேபியா மன்னர் இந்த அந்தஸ்து தந்ததில்லை...

**மொரார்:-** காடிலாக் மோடார் தந்ததாக...

**நேரு:-** ஆமாம் ... அவருக்கென்று ஸ்பெஷலாகக் கட்டப்பட்ட கடிலாக்... தங்கக் கடிகாரம்... இன்னும் எத்தனையோ... பரிசுகள், கிடக்கட்டும்,நமதுபாரதம்பொன் விளையும் பூமி என்று பெருமை பேசுகிறோம்...மொரார்ஜீ! சவுதி அரேபியாவில் ஒரு விருந்து நடத்தினார்கள்... அடா அடா.... எப்படி இருந்தது என்கிறீர்! ஆயிரம் பேருக்கு மேல் இருக்கும்.

**மொரார்:-** ஜனங்களா?

**நேரு:-** சீமான்கள்! என்ன தடபுடல்! என்ன ஆடம்பரம்! எலக்ட்ரிக் விளக்கு அலங்காரம் எப்படி என்கிறீர்? ஐம்பதனாயிரம் விளக்குகள்...

**மொரார்:-** ஜெகஜ்ஜோதியாக இருந்திருக்கும்...

**நேரு:-** எந்தப் பாதுஷாவுக்கும் அதுபோல நடந்திருக்காது... ஒன்று தெரியுமா...சவுதி அரேபிய மன்னருக்கு நான் யானை கொடுத்தேனல்லவா...

**மொரார்:-** யானைக்கு என்ன...பாலைவனக் காற்று...யானைக்கு ஆகவில்லையா...

**நேரு:-** (சிரித்தபடி) செச்சே! யானை சுகமாக இருக்கிறது மொரார்ஜி! யானை வாத்யம் வாசித்தது என்னை வரவேற்க...

**மொரார்:-** யானை வாத்யம் வாசித்ததா?

**நேரு:-** ஆமாம்... பழக்கி வைத்திருக்கிறார்கள் அதுபோல. ஒரு வாத்யக்கருவியை துதிக்கையில் கொடுத்தார்கள்...அது வாயில் வைத்து, ரொம்ப ஜோராக வாசித்தது...

**மொரார்:-** நம்ம தேச யானைகளுக்குக்கூடக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

**நேரு:-** அதை எங்கே கற்றுக் கொடுக்கிறீர். உங்கள் குஜராத்திகளுக்குக் கூச்சல்போடக் கற்றுக்கொடுத்திருக்கிறீர், (சிரிக்கிறார்.)

**மொரார்:-** ஊரே சிரிப்பாய்த்தான் சிரிக்கிறது.

---

## தி. மு. க. செயலாளர்கட்கு வேண்டுகோள்

வழக்கம்போல் திராவிடர் நாட் குறிப்பு 1957-ம் ஆண்டுக்கும் வெளியிடப்படுகிறது. டயரியில் வெளியிடுவதற்காக எல்லா தி. மு. கழக கிளைகளின் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் பெயர்களையும் எந்த மாவட்டத்தைச் சேர்ந்ததுஎன்ற விவரத்தையும் 15—9—56க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதியனுப்புமாறு கிளைக்கழக செயலாளர்களையும், மாவட்டச் செயலாளர்களையும்வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**காஞ்சி மணிமொழியார்,**
போர்வாள் அலுவலகம்,
147 பவழக்காரத் தெரு,
சென்னை 1.

[போலீஸ் அதிகாரி ஒருவர் மெள்ள எட்டிப் பார்க்கிறார்.

மொரார்ஜி, எழுந்து செல்கிறார்.

நேரு பண்டிதர், தாம் எழுதிய புத்தகம் ஒன்றை எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்,]

* * *

**இடம்:- மாளிகை—தனி அறை**

**இருப்போர்:-இரண்டோர் உயர்தர போலீஸ் அதிகாரிகள்.**

நிலைமை:- [போலீஸ் அதிகாரியும் மொரார்ஜியும் உள்ளே வருகிறார்கள். போலீஸ் அதிகாரிகள் எழுந்து 'சல்யூட்' அடிக்கிறார்கள். மொரார்ஜி ஒரு சோபாவில் உட்காருகிறார்.

அதிகாரிகளை உட்காரும்படி ஜாடை காட்டுகிறார்.]



மொரார்ஜி:- ஏற்பாடு எல்லாம் சரியானபடி....

போலீஸ் அதிகாரி:- எல்லா ஏற்பாடுகளும் ஏ. ஒன்.

மொரார்:- எத்தனை டிவிஷனுக்கு சொல்லியிருக்கிறீர்.

போலீஸ்:- எட்டு டிவிஷன் கூட்டம் நடக்கும் இடத்தைச் சுற்றிலும், இன்னும் ஒரு ஆறு டிவிஷன் தயாராக, தொலைவில்...

மொ:- ஜனங்கள் எப்படி இருக்கிறார்கள்? பண்டிட்ஜி இந்தக் கூட்டம் பிரமாதமாக நடக்க வேண்டும் என்று விரும்புகிறார். சவுதி அரேபியா விஜயம் முடிந்ததும், நடக்கும் கூட்டம், மாசு மருவு இல்லாமல் நடந்தால் தான், மதிப்பு...

போலீ:- ஆமாம், நாங்கள் செய்ய வேண்டியது ஒன்றும் பாக்கி இல்லை. சந்தேகத்துக்கு உரியவர்களை...

மொ:- லாக்கப் செய்துவிட்டீர்கள் அல்லவா? கூட்டத்துக்கு, போதுமான அளவு ஜனங்கள் வருவார்கள் அல்லவா...

போலீ:- பண்டிட்ஜீ கூட்டம் எப்போதும் ஜன சமுத்திரம்தானே

மொ:- அப்படிச் சொல்லிவிட முடியாதே! என் கூட்டத்திலே நடந்த கதி நேரிட்டுவிட்டால், தீர்ந்தது, பண்டிட்ஜீ, பதறிப் போவார், பம்பாய் ராஜ்யமே வேண்டாம், போய், பந்த்ஜியை அனுப்புகிறேன் என்று கூறிவிடுவார்...சரியாகக்கவனித்துக் கொள்ளுங்கள்.

போலீ:- தக்க பாதுகாப்பு ஏற்பாடு செய்திருக்கிறோம்,

மொ:- கொடும்பாவி — பல்பு வீச்சு — செருப்பு மாலை — இப்படிப் பட்ட அலங்கோலம், எதுவும் நேரிடாதே-

போலீ:- இருக்காது,

மொ:- ஏதாவது துளி அலங்கோலம் நேரிட்டாலும், உலகச் சூழ்நிலையே பாதிக்கப்பட்டு விடும். சூயஸ் பிரச்சினைக்கே, இப்போது நம் பண்டிட்ஜீயின் யோசனையைத்தான் கேட்டிருக்கிறார்கள். உலகப் போர் வராமல் தடுக்கும்சமாதானத் தூதர் என்று சவுதி அரேபியாவில் வரவேற்றார்கள். சொந்த நாட்டில், ஒரு பொதுக்கூட்டத்தில் அவருக்கு மரியாதை கெட்டுவிட்டது என்றால், உலகிலே ஓங்கி வளர்ந்திருக்கும் மதிப்பே மங்கிவிடும். தெரிகிறதா. சர்வ ஜாக்ரதையாக இருக்க வேண்டும். பம்பாயின் மானம் மட்டுமல்ல, பாரதத்தின் மானமே உங்களிடம்தான் இப்போது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

[போலீஸ் அதிகாரிகள் செல்கிறார்கள்

மொரார்ஜி பழையபடி கூடம் வருகிறார்

படித்துக் கொண்டிருக்கும் நேரு, ஒரு சிகரட் பற்ற வைத்துக்கொண்டே]

நேரு:- யார், நிருபர்களா?

மொ:- இல்லை, இல்லை...போலீஸ் ஆபீசர்கள்.

நேரு:- (அலட்சியமாக) நான் சென்ஸ்! ஏன் இந்தப் பயம் மொரார்ஜி! போலீசின் உதவி எதற்கு, என் கூட்டத்துக்கு...? கேவலம்...மகா கேவலம்...

மொ:- பாதுகாப்புக்காக அல்ல... நமக்காக அல்ல...பெருங் கூட்டம் கூடுமே...அதிலேஜனங்கள் மோதி மிதித்து, சேதம் ஏற்படாதபடி தடுக்க...

நேரு:- ஓஹோ! அதற்கா! சரி, சரி ...என்ன சரி, சரி, அதற்கும் தான் போலீஸ் எதற்கு? ஜனக் கூட்டம் கட்டுக்கு அடங்காமல் இடித்துக்கொண்டு வந்தால் நான் ஒருமுறை, இரண்டுமுறை ஒழுங்கு! ஒழுங்கு! என்று கூறு



வேன்...ஒழுங்கு ஏற்படவில்லையானால், கூட்டத்தின் நடுவிலேயே தாவிக் குதித்து, ஒழுங்கை நிலைநாட்டுவேனே... போலீஸ் வேண்டுமா இதற்கு... ஆனாலும் பரவாயில்லை... போலீஸ் வந்துவிட்டுப் போகட்டும்...போலீசுக்கும் ஆசையாக இருக்கும், கூட்டம் பார்க்க, பேச்சைக் கேட்க...வரட்டும்... ...புறப்படலாமே......

[இருவரும் புறப்படுகின்றனர்.]

* * *

**இடம்:- கூட்டம் நடைபெறும் திடல் பக்கம்.**

[போலீஸ் வான்கள், ஜீப்புகள் வருகின்றன. அவற்றின் ஊது குழல் சத்தத்தையும் மிஞ்சும்படி,

மகா குஜராத் ஜிந்தாபாத்
மொரார்ஜி தர்பார் முர்தாபாத்
மகா குஜராத் ஜிந்தாபாத்
என்ற கோஷம் எழுகிறது.

போலீசார் தடியைத் தடியுடன் தட்டி பீதி உண்டாக்கப் பார்க்கிறார்கள். பண்டிதரின் மோடார் கிட்டே வரவர, கோஷம் பலப்படுகிறது.

பண்டிதர் மேடைமீது ஏறி நின்று புன்சிரிப்புடன் 'நமஸ்த்தே' சொல்லுகிறார்.


மகா குஜராத் ஜிந்தாபாத் என்ற கோஷம் வானைப் பிளக்கிறது. கருப்புக் கொடிகள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

போலீஸ் அதிகாரிகள் சிரமப்பட்டு, ஒழுங்கை நிலைநாட்டப் பார்க்கிறார்கள்.

மேடையில் மொரார்ஜி பீதி கொண்ட முகத்துடன் இருக்கிறார்.]

**நேரு:-** நான் இங்கு வந்திருப்பது எதற்கு என்பது தெரியும் எல்லோருக்கும். நண்பர்களே! நமது நாட்டிலே...

[மகா குஜராத் ஜிந்தாபாத் என்ற கோஷம் பலமாகிறது; நேரு பேச முடியாமல் தவிக்கிறார். போலீஸ்



அதிகாரிகள் கை பிசைந்துகொள்கிறார்கள். குரலை சற்று உயர்த்திப் பேசுகிறார்]

**நேரு:-** நான் இங்கு வந்திருப்பது மாணவர்களிடம் அன்புடன் சில முக்கியவிஷயங்கள் பேச. இன்று மாணவர்களுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது, என்னவென்றால்........

[மகா குஜராத் ஜிந்தாபாத். மகா குஜராத் வேண்டும்]

**நேரு:-** (சிறிது கோபத்துடன்) இப்படிக் காட்டுக் கூச்சல் போட்டால் நான் பேசுவது எப்படிக் கேட்கும்...என்ன இது, ரகளை... ஏன் இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள்......?

[மகா குஜராத் ஜிந்தாபாத் என்ற கோஷமும் போலீசார் உட்கார்! உட்கார்! என்று அதட்டும் கூச்சலும் ஒன்றை ஒன்று மிஞ்சுகிறது]

**நேரு:-** (கோபம் வளர்கிறது) முட்டாள்கள்! முரடர்கள்! கருப்புக் கொடியா காட்டுகிறீர்கள்? எனக்கா!......அவ்வளவு துணிச்சலா உங்களுக்கு...

போலீசார் கருப்புக் கொடியைக் கொடு! கருப்புக் கொடியைக் கீழேபோடு! என்று கூச்சலிட மாணவர்கள் கருப்புக் கொடி காட்டியே தீருவோம்! கருப்புக் கொடியைக் கீழே போடவே மாட்டோம்.

நேருவே திரும்பிப்போ!
நேருவின் தீர்ப்பு ஒழிக!
மொரார்ஜி தர்பார் முர்தாபாத்!
மகா குஜராத் ஜிந்தாபாத்!
என்று பலமாக முழக்கமிடுகிறார்கள்)

**நேரு:-** (முகம் சிவந்த நிலையில்) போக்கிரித்தனம்! என்னிடமா உங்கள் வாலாட்டம் காட்டுகிறீர்கள்...நான் நினைத்தால் ஒழித்துக் கட்டிவிடுவேன்......ஆமாம், சர்வகலாசாலையையே மூடிவிடச் சொல்லுவேன்...

[ஆர்ப்பாட்டக்காரர்,
செய்! செய்துபார்!
அடி! சுடு!
கொன்றுபோடு!
அஞ்சமாட்டோம்!
மகா குஜராத் ஜிந்தாபாத் என்றுபெருங்கூச்சலிடுகிறார்கள்.]

**நேரு:-** நான்சென்ஸ்! இது என்ன காட்டுமிராண்டித்தனம்...நீங்கள் என்ன, மாணவர்கள்தானா! மடையர்களே! பாசிஸ்டுகளே! கம்யூனிஸ்டுகளே! காலிகளே!...

[ஆர்ப்பாட்டக்காரர் ஒருவருக்கு ஒருவர்]

**ஒருவர்:-** கேட்டாயா, என்னென்ன சொல்லுகிறார் என்று......நாம் காலிகளாம், காட்டுமிராண்டிகளாம்...

**மற்றொ:-** உளறட்டும் எதையாவது ...இவர் காலி என்று நம்மைச் சொல்லிவிட்டால், காலிகளாகிவிடுவோமா...தன் குட்டு உடைபடுகிறதே என்ற எரிச்சல், ஏசட்டும், ஏசட்டும், மகாகுஜராத் ......

**பலர்:-** ஜிந்தாபாத்...



நேரு:- (சிறிது உருக்கமாக) நண்பர்களே! ஏன இப்படிக் கலகம் செய்கிறீர்கள்......உங்கள் சர்வகலாசாலே துணே வேந்தர், மாணவர்களுக்கு ஏதாவது வந்து சொல்லுங்கள் என்று அழைத்தார்... பிரேமை காட்ட, அன்பு காட்ட வந்தேன். இப்படி அலங்கோலம் செய்கிறீர்களே......

ஒருவர்:- சுருதி மாறுது பார்த்தயா......

இன்னெ:- எல்லா வித்தையும் தெரியும்... ஆசாமி பலே ஆளல்லவா...

மற்:- இதனுலே எல்லாமா நாம் ஏமாந்துவிடப்போகிறேம்........ ஆகட்டும்...மகா குஜராத்...

பலர்:- ஜிந்தாபாத்...

[போலீசார் விரைந்து சென்று கூட்டத்தினரைக் கலேக்கிருர்கள்]

போலீஸ்:- அமைதி! அமைதி! அமைதி...

மாணவர் பலர்:- மகா குஜராத் ஜிந்தாபாத்.

போலீஸ்:- இனி, கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டி நேரிடும். மரியாதையாகக் கலேந்து போய்விடுங்கள்...வம்பு வளர்த்துக்கொள்ளாதீர்கள்...

மாணவர் சிலர்:- நீங்கள்தான் எங்களிடம் வம்பு செய்கிறீர்கள்...... எங்கள் அதிருப்தியைக் காட்டுகிறேம், அதனுல் என்ன? குஜராத் தன் கண்டனத்தைத் தெரிவிக்கிறது, உங்களுக்கு என்ன...

போலீஸ்:- கூட்டம் நடக்கும் இடத்தைவிட்டு, தொலேவில் போய் இருந்துகொண்டு உங்கள் கோஷத்தைக் கிளப்புங்கள்...

மாண:- யார், கேட்பதற்காம்! ஐயா, ஆபீசர்! எங்கள் வயற்றெரிச்சலே, நேரு முன்பு காட்டாமல், வெட்டவெளியில் யாரிடம் காட்டச்சொல்லுகிறீர்.

போலீஸ்:- அடா! அடா! பெரிய தொல்லேயாகிவிட்டது...அவர் பேச்சு எப்படிக்காதில் விழும்...

மாண:- அது ஒன்றும் எங்கள் காதில் விழத் தேவை இல்லே. எங்கள் உரிமை முழக்கம்தான், அவர் காதில் விழவேண்டும், ஆகட்டும், சொல்லுங்கள் தோழர்களே! நேரு காதில் விழும்படிச்சொல்லுங்கள், மகாகுஜராத்......

அனேவரும் - ஜிந்தாபாத்...

நேரு:- (அதிகக் கோபம்கொண்டு) குரங்குபோலக் குதிப்பதைப்பார்! மிருகக் காட்சிச்சாலேயைத் திறந்துவிட்டுவிட்டார்களா! அடகாலிகளா......(குரலே உயர்த்தி) உங்கள் காலித்தனத்துக்கு நான் அஞ்சமாட்டேன்...நான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் சிங்கத்தையே எதிர்த்தவன்...தெரியுமா...

மாண:- (கேலியாக) ஓ! தெரியுமே! பிரிட்டிஷ் சிங்கத்தை எதிர்த்தவரே! குஜராத் போர்க்கோலம் பூண்டுவிட்டது! சாச்சா நேரு! உம் பாச்சா இங்கே பலிக்காது.

நேரு:- இப்படிக் கூச்சலிட்டால், நான் பேசுவதை நிறுத்திக் கொண்டு போய்விடுவேன்...

மாண:- ஹை! ஹை! போயேன் ...குடியாமுழுகிவிடும்...குஜராத்துக்குத் துரோகம் செய்யும் கும்பல்...

மற்றவர்:- கூண்டோடு ஒழிக...

மாண:- மகா குஜராத்...

அனே:- ஜிந்தாபாத்...

நேரு:- செச்சே! என்ன காலித்தனம், என்ன ஈனத்தனம்...... குரங்குகளே...

மாண:- கேட்டாயா, குரங்குகளாம் ......மிருகங்களாம்.........காட்டுமிராண்டிகளாம்.

மற்றோர் மாண:- எதிர்ப்புக் கண்டு மிரண்டு, உளறுகிருர்—

நேரு:- ஜங்கிலிகளே! ஜாக்ரதை!

மாணவர் பலர்:- தும் ஜங்கிலி! மொரார்ஜி ஜங்கிலி! காங்கிரஸ் வாலா ஜங்கிலி!

நேரு:- உலகம் புகழ்கிறது என்னே—உதவாக்கரைகளே! என்னிடமா காலித்தனம் செய்கிறீர்கள்...

மாண:- காலித்தனம் அல்ல, உரிமை முழக்கம்! சுதந்திர எழுச்சி!

நேரு:- இப்படி எல்லாம் செய்தால் ரஷியாவில் என்ன செய்வார்கள் தெரியுமா — சைனவில் என்ன செய்வார்கள் தெரியுமா...?

ஒரு மாணவர்:- (மற்ருெர் மாணவரிடம்) என்ன, சாச்சா, ரொம்ப மிரட்டுகிருர்...

மற்:- ரஷியாவிலும் சைனவிலும் இப்படிப்பட்டவர்களே, கம்போன்றவர்களேச் சுட்டுக் கொன்று போட்டார்களாம்—

ஒரு மாண:- அதுபோல நானும் செய்வேன் என்று மிரட்டுகிருரா? சுடட்டுமே! சுட்டுத் தள்ளாமலா இருந்தார்கள்......சுடு! தைரியமிருந்தால் சுட்டுத்தள்ளு

மற்:- உலகம் புகழ்கிறதாம்!

இன்னேர் மாண:- உலகம் ஏன் புகழாது......இங்கு நாம் கண்ணே மூடிக்கொண்டு முடிசூடா மன்னர் ஆக்கிவிட்டோமல்லவா, அந்தப் பளபளப்புப் பார்த்து உலகம் புகழ்கிறது...இப்போது?

மாண:- சிரிப்பாய்ச் சிரிக்கிறது. மகாகுஜராத்...

அனேவரும்:- ஜிந்தாபாத்...

நேரு:- மகாகுஜராத்தா வேண்டும் ...அதைப் பெற இதுவா முறை ...மகா குஜராத்தாம், மகா குஜராத்! மடைத்தனம்! பாரதம் தான் தேசம்...குஜராத், பஞ்சாப் என்றெல்லாம் பேசுவது பைத்யக்காரத்தனம்.......இரு மொழி ராஜ்யம் ஏற்பட்டுவிட்டது... அதைத் தடுக்க யாராலும் முடியாது—


அனே:- தடுத்தே தீருவோம்.

நேரு:- (ஆத்திரமாக) ஒருக்காலும் முடியாது! பந்தயம் கட்டுங்கள் பார்ப்போம். நவம்பர் முதல் தேதி புதிய ராஜ்யம் ஏற்பட்டே தீரும்...

அனே:- ஏற்படவிடமாட்டோம்...

நேரு:- தடுக்கமுடியாது...

அனே:- (ஆத்திரத்துடன்) தடுத்தே தீருவோம். மகா குஜராத்...



அனை:- ஜிந்தாபாத்!
[கூட்டத்தில் ஒரு மூலையில் இருந்து, ஆதரவாளர்கள், சாச்சாநேரு, ஜிந்தாபாத்—என்று கூறுகின்றனர்.
நேரு, அந்தச்சத்தம் கேட்டு சிடு சிடு என்றிருந்தவர் சோகக் குரலில்]

நேரு:- போதுமய்யா, உங்கள் புகழ் கீதம்! சாச்சா நேரு ஜிந்தாபாத் தாம்...சாச்சாநேரு! சாச்சா நேரு வைத்தான் நூறு நேரு ஆக்கி விட்டீர்களே, என் கவுரவத்தையே குறைத்துவிட்டீர்களே...இந்த இலட்சணத்தில் வாழ்த்து ஒரு கேடா...வாயை மூடிக்கொண்டு இருங்கள்...நீங்களாவது...பார்! பார்! பொடிப் பயல்கள், என்ன குதியாட்டம் போடுகிறார்கள்...புத்தி கெட்டு விட்டதே இதுகளுக்கு......ஏய், பயல்களா! நீங்கள் எல்லாம், யார்? கம்யூனிஸ்டுகளா?

அனை: இல்லே, இல்லே!

நேரு:- சோஷியலிஸ்டுகளா?

அனை:. இல்லே, இல்லே!

நேரு:- ஜனசங்கமா?

அனை:- அதுவும் இல்லே.

நேரு:- இராம ராஜ்ய பரிஷத் ஆசாமிகளா?

அனை:- அதுவும் அல்ல! நாங்கள் குஜராத்திகள்.

நேரு:- (கேலியாக) குஜராத்திகள் ...குரங்குகள்...

அனை:- நாவை அடக்கிப் பேசும், போலீஸ் இருக்கிறது என்கிற தைரியமா...மகாகுஜராத்ஜிந்தாபாத்—

நேரு:- (சலிப்புடன்) நான் எவ்வளவோ ஆசையுடன் இங்கு பேச வந்தேன்...கலகம் செய்து என்னைப் பேசவிடாமல் தடுத்துவிட்டீர்கள்....எவ்வளவோ விஷயம் பேச நினைத்தேன்—

மாண:- எங்கள் விஷயம் பேசு! மகாகுஜராத் தேவை! மகா குஜராத் தரவேண்டும்—

நேரு:- இப்போது, புதிய இரு மொழி ராஜ்யம்தான். இதை மாற்றப்போவதில்லே, மாற்றமுடியாது...வேண்டுமானால், இன்னும் பத்து வருஷம் போகட்டும், ஐந்து வருஷம் கழியட்டும், பார்க்கலாம்.

மாண:- பேரம் பேசுகிறார் நேரு—

இன்:- ஏமாற்றப் பார்க்கிறார்.

வேறு:- பத்து வருஷத்துக்குப் பிறகாம்....ஏனும்......இப்போது மகாகுஜராத் அமைப்பதில் என்ன வந்து இவ்ரைக் குத்து கிறதாம்—

மாண:- கௌரவம் குடைகிறது.

மற்:- நம் மானம் பறிக்கப்பட்டதே! அதற்கென்ன சொல்கிறார். நம் உரிமை அழிக்கப்படுகிறதே, அதற்கென்ன சொல்கிறார்—

நேரு:- சூயஸ் பிரச்சினைபற்றிச் சிறிது பேசலாம் என்று நினைக்கிறேன்—

மாண:- சூரத் சமாசாரம் பேசுமய்யா ...சூயஸ் போகவிடாதீர்—

இன்:-—சூயஸ் பிரச்சினையில் இவர் தானே சமாதானத் தூதர், அந்தப் பெருமையைப் பேசப்போகிறார்—

மாண:- கேட்டுக் கேட்டுக் காது புளித்துவிட்டது.

நேரு:- சவுதி அரேபியாவிலே, மாணவ நண்பர்களே! நான் சென்றிருந்தபோது...

மாண:- ஆரம்பித்து விட்டாரப்பா, 'ஜம்பம்' பேச! இவருக்கு அங்கு நடந்த விருந்து, அதிலே கலந்துகொண்ட சீமானுடைய சிரிப்பு...

இன்னெ:- ச்சீ! சொன்னல் சரியாகச் சொல்லு.......சீமானுடைய சிரிப்புபற்றி அவருக்கு என்ன? சீமாட்டியுடைய சிரிப்பு, அதைச் சொல்லு.

நேரு:- அராபிய நாடுகளில் நமது மதிப்பு உயர்ந்திருக்கிறது—

மாண:- இங்கு நம்ம ஜெயில்கள் நிரம்பி வழிகிறது! மகாகுஜராத்

அனை:- ஜிந்தாபாத்!

நேரு:- (அதிக ஆத்திரமடைந்து) நானும் இந்த 90 நிமிஷங்களாக முயன்று பார்த்தேன், காலித்தனம் நிற்கவில்லே......இனியும் இங்கு நான் பேச முயற்சிப்பதில் பலன் இல்லே—
[போகப் புறப்படுகிறார்.
போலீஸ் ஊதுகுழல்கள் சத்தம் கிளப்புகின்றன,
மோட்டார் 'ஹாரன்'கள் அலறுகின்றன,
எல்லாவற்றையும் மீறிக் கொண்டு, மகா குஜராத் ஜிந்தாபாத் முழக்கம் கிளம்புகிறது.
நேரு, தன் பரிவாரத்துடன் சென்றுவிட்டார்]

* * *

இடம்:- மொரார்ஜி மாளிகை

இருப்போர்:-மொரார்ஜி நண்பர்கள்.

நிலைமை:- மொரார்ஜி, தம் நண்பர்களுடன் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்.

ஒரு சீமான்:- மொரார்ஜீ பாய்க்கு கஷ்டத்தின்மேல் கஷ்டம்...... அடுக்கடுக்காக......பண்டிட்ஜீ, ரொம்பக் கோபம் கொண்டுவிட்டார்—

இன்னேர் சீமான்:- விமானத்தில் ஏறும்போது, வழக்கமான புன் சிரிப்புகூட இல்லே—

மொ:- எப்படி இருக்கும், அவ்வளவு நடந்த பிறகு...சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்...சட்னி போதுமா........சப்பாத்தி இன்னென்று...

சீமான்:- மொரார்ஜீபாய், பண்டிட் ஜீக்குக் கோபம் ஜனங்கபேரில் மட்டும்தானே...

மொ:- என் பேரில் கோபம் ஏற்பட்டிருக்குமா என்கிறீரா! ஏற்பட்டால் என்ன, ஏற்படாவிட்டால் என்ன—

சீமான்:- முன்பு, மொரார்ஜீ, நம்ம கூட்டத்துக்கு ஜனங்கள் வராமல் 'பாய்காட்' செய்தார்களே, அதுபோலச் செய்திருந்தாலும் பரவாயில்லே.....பண்டிட்ஜீ கூட்டத்திலே வந்திருந்து இவ்வளவு ரகளை செய்து, ரசாபாசம் செய்தது, ரொம்ப ரொம்ப அசிங்கமா இருந்தது.

மொ:- அப்படித்தான்.......ஜனங்களோட ஆத்திரம் இப்படித்தான் ...ரசகுல்லா சாப்பிடவில்லையா ......ராதாராம்ஜீ! என்ன ஒன்றுமே சாப்பிடவில்லே......பத்தியமா?

ரா:- ராம்! ராம்! அதெல்லாம் பத்தியம் கித்தியம் இல்லே...கவலே ...நேருஜீயிடம் எவ்வளவு பக்தி விசுவாசம் இருந்தது ஜனங்களுக்கு...இதற்குள்ளே இப்படி ஆகிவிட்டதே.....இன்னும் போகப்போக எப்படி எப்படி

ஆகுமோன்னு நினைக்கும் போதே, ராம்! ராம்! மனசு 'பட் பட்'னு அடிச்சுக்குது.

சீமான்:- பேப்பர்காரன் எல்லாம் பெரிசு பெரிசாப் போட்டுவிடுவானு மொரார்ஜீ—

மொரார்:- இங்கேமட்டுமா......இன்னேரம், அமெரிக்காவிலே போய்ச் சேர்ந்திருக்கும் சேதி—

ரா:- பண்டிட்ஜீக்குப் பம்பாய் ராஜ்யத்திலேயே இவ்வளவு பெரிய எதிர்ப்பா என்று அமெரிக்காவிலே ஆச்சரியப்படுவாங்க... அப்படித்தானே மொரார்ஜி—

சீமான்:- அமெரிக்கா, நமக்குக் கடன் கொடுக்கறதுக்குக்கூட, இனி யோசனை செய்யும்... அப்படித்தானே மொரார்ஜி—

மொரார்:- உலகத்திலே நேருவுக்கு ஏற்பட்டிருக்கிற புகழுக்குக் கொஞ்சம் பங்கம்தான்...ஆனால் சேட்ஜீ! ஒரு விஷயம் கவனிக்க வேணும்...எனக்கு அவமானம் நடந்தபோது, எனக்கு எதிராகக் காலித்தனம் நடந்தபோது, எனக்கு ஜனங்களிடம் செல்வாக்கு இல்லை, பக்குவம் தெரியவில்லை, பரிபாலனம் செய்யத் தெரியவில்லை, என்று பேசினார்களே—

ரா:- பண்டிட்ஜீ, அப்படியா சொன்னார்?

மொரார்:-யார் சொன்னது என்பது கிடக்கட்டும்.........அவரும் அப்படித்தான் எண்ணியிருந்திருப்பார். மொரார்ஜீக்குச் செல்வாக்குப் போய்விட்டது, அதனாலேதான், ஜனங்களுக்குக் கலகம் செய்யத்துணிவு வந்தது, என்று பேசினார்களே, அவர்களுக்கெல்லாம் இப்போதுதான் உண்மை தெரிந்திருக்கும்...பண்டிட்ஜீயே படாத பாடு பட்ட பிறகுதான், குஜராத்திலே எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பது தெரிந்திருக்கும்.

சீமா:- அது உண்மைதான்... ஆனால், மொரார்ஜீ பாய், மன்னிக்க வேணும், எவ்வளவு ஆத்திரம் இருந்தாலும், பண்டிட்ஜீ வந்து பேசினால், ஜனங்கள் சமாதானமாகி விடுவார்கள் என்றுதான் நானும் நினைத்தேன்... உண்மையா...

மொரார்:- நீர் நினைத்ததிலே ஆச்சரியம் என்ன சேட்ஜீ! நேருவுக்கே அதே நினைப்புத்தான். எவ்வளவு கோபதாபம், ஆத்திரம் இருந்தாலும், தேபர்ஜி, மொரார்ஜி, பட்டேல்ஜி இப்படிப் பட்டவர்களிடம்தான் ஜனங்கள், காட்டுவார்கள், நம்முடைய முகத்தைப் பார்த்ததும், 'கப்சிப்' என்று அடங்கிவிடுவார்கள்... ஆத்திரம் இருந்தால்கூட அடக்கிக்கொண்டு, சொல்வதைக் கேட்பார்கள் — செய்யச் சொல்வதைச் செய்வார்கள்—அப்படிப்பட்ட செல்வாக்கு நமக்கு இருக்கிறது, என்றுதான் பண்டிட்ஜீயே நினைக்கிறார்... அதுபொய்... நாங்கள் மொரார்ஜீயை எதிர்க்கவில்லை... எங்களுக்கு எந்த 'ஜீ'க்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பது பற்றி அக்கறை கிடையாது. எங்கள் கோரிக்கைதான் எங்களுக்கு முக்கியம்... நேரு பெரியவர்தான், ஆனால் மகா குஜராத் எங்களுக்கு நேருவைவிடப் பெரியது... என்பதைக் காட்டிவிட்டார்கள்.

ரா:- பேசவே விடவில்லையே பண்டிட்ஜீயை...

மொரார்:- பேசவிட்டு விட்டால், மகா குஜராத்தை ஒப்புக்கொண்டதாக ஏற்பட்டுவிடும் என்கிற எண்ணம் ஜனங்களுக்கு...

சீமா:- காது ஜவ்வு அறுந்து போகும் போலிருந்தது, ஜிந்தாபாத் சத்தம்.

மொரார்:- கூட்டம்மட்டும் அமைதியாக, கலவரம் இல்லாமல், நடந்திருந்தா...

சீமா:- பண்டிட்ஜீ, பல விஷயங்களைச் சொல்லி இருப்பார்.

ரா:- கம்யூனிஸ்டுகளை ஒரு பிடி பிடித்திருப்பார்.

மொரார்:- அதுமட்டுமா! என்னையே மிரட்டி இருப்பார். மொரார்ஜீ! பார்த்தயா. இது போலப் பக்குவமாகப் பேசி, ஜனங்களைச் சரிப்படுத்த வேண்டும்... ஒரு துளி கலகம் இருந்ததா... மகா குஜராத் கேட்பது மடைத்தனம் — காட்டுமிராண்டித்தனம் என்று மண்டையில் அடித்தது போலத்தானே பேசினேன்...!'கப்சிப்', வாய்திறந்தார்களா... சரி... இனி, நிலைமை மறுபடியும் பாழாகாதபடி, பார்த்துக்கொள்ள வேணும்... என்றெல்லாம் சொல்லி இருப்பார்.

சீமா:- ஆமாம்...

மொரார்:- அதைவிட, எனக்கு வேறு என்ன அவமானம் ஏற்படமுடியும்...உன்னாலே முடியவில்லை, உன்னுடைய குஜராத்திலே ஒழுங்காக ஒரு கூட்டம் நடத்த,நான் வந்து நிலைமையைச் சரிப்படுத்தவேண்டி இருக்குது ...என்று பண்டிட்ஜீ சொல்வாரே! அதைக் கேட்டுக்கொண்டு, எப்படி நான் சகிப்பது—

ரா:- அது சரி...ஆமாம்.

மொரார்:- இப்போது? மொரார்ஜிக்கு நடந்ததைவிட அதிகமாக அலங்கோலம் நமக்கே நடந்துவிட்டது என்று எண்ணி, பண்டிட்ஜி, என் முகத்தைப் பார்க்கக்கூட வெட்கப்பட்டுக் கொண்டு போய்ச் சேர்ந்தார்... என்ன செய்வது... எத்தனை நாளைக்கு பண்டிட்ஜீயின் செல்வாக்கு ஆடாமல் அசையாமல் இருக்கும்... அததற்கு ஒரு காலம் உண்டல்லவா.


சீமா:- ஆமாம், மொரார்ஜீ! பொதுவா, இப்ப, நமக்குக் கஷ்டகாலம்னுதான் சொல்லவேணும்.

மொரார்:- ஆமாம்... என்ன செய்வது... சேட்ஜீ! 'சோன்பப்டி' உமக்கு ரொம்பப் பிடிக்குமே, ஏன் சாப்பிடவில்லை...

சீமா:- இதோ...

ரா:- சரி, நடந்தது நடந்தாச்சி... நாம் கவலைப்பட்டு என்ன பலன்? ...சாப்பிடுங்க, சேட்ஜீ!

★



# தணலில் தங்கம்

**4**

அந்தப் பச்சையம்மாவின் தம்பி செய்த கொடுமையைப் பற்றி எண்ணிப் பொருமிக்கொண்டிருந்த எனக்கு இன்னம் ஒரு பேரிடி தலையில் வந்து விழும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அவ்வளவு பெரிய பேரிடி என் வாழ்க்கையை அலைக்கழிக்கும் என்பதைச் சிறுமியாய் ஆடிப்பாடி ஓடித் திரிந்த போது நானும் நினைத்தறியேன்; என்னைத் தன்னுடைய அன்பு மழையில் அரவணைத்து வளர்த்த அம்மாவும் நினைத்தறியாள். ஆனாலும் அந்த இடி என் தலை மீது விழுந்து விட்டது; விம்மி வெடிக்கும் நெஞ்சத்தில் பொருமி வெளிப்படும் வேதனையை என் என்பது? நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன்; என் வாழ்க்கை இப்படிப் பாழ்பட்டுப்போக? பட்டார்க்கே மேலும் மேலும் துன்பம் படர்ந்துவரும் என்பது போலல்லவா இருக்கின்றது, என் கதை.

''சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி'' என்று சொல்லும் பழமொழி மெய்தான் போலிருக்கின்றது. அந்த உண்மையை நான் ஏன் தெரிந்துகொள்ள வேண்டும் என்று துடித்தேனோ? ஒரு செய்தி நமக்குத் தெரியாதிருக்கும் போது நாம் அதைத் தெரிந்துகொள்ளக் காட்டும் ஆவல், அப்பப்ப, அத்தகைய ஆவலால் உந்தப்பட்டுதானே நான் இன்று இப்படித் தவிக்கின்றேன்.

பாடம் நடத்தும்போது சின்ன வகுப்புக்களில் ஆங்கில ஆசிரியர் கதை ஒன்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். அந்தக் கதைபோலாகி விட்டதே என் நிலைமை இப்போது!

யாரோ பன்டோரா என்ற சிறுமியாம் அவளிடத்தில் ஒரு நாள் புதியவன் ஒருவன் வந்து மூடிய பேழை ஒன்றைக் கொடுத்து, ''இதைத் திறக்காதே அம்மா'' என்று சொல்லிவிட்டுப் போனானாம். அந்தச் சிறுமியும் சில நேரம் அப்படியே வைத்திருந்து பார்த்தாளாம். எதையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற துருதுருப்பான பருவத்தினள் ஆனதால், உள்ளே என்னதான் இருக்கிறது என்பதைப் பார்த்துவிடுவது என்று மேல் மூடியைக் கொஞ்சம் மெல்லத் தூக்கினாளாம். உடனே உள்ளே இருந்து நச்சுப் பிராணிகளும் பிறவும் வெளி வந்து அறையெல்லாம் பரவி அவளைத் துன்புறுத்தினவாம். வெளியேறிய பிராணிகள் விளைத்த தொல்லை தாங்காமல் அவள் அப்பெட்டியை மீட்டும் மூடிவிட்டாளாம். என்றாலும் வெளியில் வந்துவிட்டவை விளைத்த வேதனை மிக அதிகமாக இருந்ததாம். இந்தக் கதையைக் கேட்கும்போதெல்லாம் நான் அந்தப் பண்டோராவுக்காக மனம் இரங்குவேன். ''அவள் மட்டும் திறக்காமல் இருந்தால்''...... என்றே பலமுறை எண்ணி எண்ணி அனுதாபப்பட்டிருக்கிறேன்.

அந்தக் கதை கட்டுக்கதைதான். உண்மையில் பண்டோரா என்று ஒருத்தி வாழ்ந்ததே இல்லை என்று என் அறிவு பலமுறை இடித்திடித்து உரைத்தபோதும் மனம் மட்டும், 'அவள் மட்டும் திறக்காமல் இருந்தால்' என்றே பலமுறை எண்ணத் தொடங்கிவிடும்.

எந்தப் பண்டோராவின் நிலையை நினைந்து நினைந்து அவளுக்காக நான் பலநாள் இரக்கமும் அனுதாபமும் கொண்டேனோ அதே பண்டோராவின் நிலையில் நான் இருந்திருந்தால் அதைத்தான் செய்திருப்பேன் என்பது மட்டும் ஏனோ எனக்குத் தோன்றவில்லை.

**மா. கி. தசரதன்**

என்னிடத்திலும் ஒரு நாள் ஒரு மூடிய பேழை கிடைத்தது. அதைத் திறப்பதற்கும் எனக்கு வழி தெரிந்திருந்தது. திறந்தால் என்ன இருக்குமோ எனவும் நான் பலமுறை அஞ்சி அஞ்சி அடங்கி இருந்திருக்கின்றேன். ஆனால் ஒரு நாள் நல்ல சூழ்நிலை வந்து வாய்த்ததும் என்ன, நேரும் என்பதைப் பற்றி எண்ணிப் பாராமல் அந்தப் பேழையைத் திறந்தேன். துன்பத்தின் எல்லையைக் கண்டேன்.

என்னிடத்திலே இருந்த பேழை எனது குடும்பநிலை என்பது, அந்தக் குடும்பத்தில் நான் ஏன் இப்படி நடத்தப் படுகின்றேன் என்பதைப் பற்றியோ இனி என்கதி என்ன என்பதைப்பற்றியோ, நான் ஒன்றும் அறியேன். ஆனால் மூடுமந்திரமாக இந்த அந்தப் பேழையைச் செங்கமலக் கிழவி எனக்காகத்திறந்து காட்டுவாள் என்று பல நாள் எண்ணிக் காத்திருந்தேன். என் எண்ணமும் வீண்போகவில்லை. ஒரு நாள் வீட்டிலே யாருமே இல்லாத வாய்ப்பு கிட்டியது. உடனே அந்தச் செங்கமலக்கிழவியை வரச்சொல்லி அனுப்பினேன். அவள் வந்ததும்தான் என்ன இலேசில் இடம் கொடுத்து விடுடாளா.

அன்று ஒருநாள் அவள் வந்த போது ஓரகத்தி நடந்துகொண்டதை நினைந்து ''எனக்கேண்டி அம்மா வம்பு எனக்கேண்டி அம்மா வம்பு'' ''நீ நன்றாக வாழ்ந்தால் சரிதான்'' என்றுதான் திரும்பத் திரும்பக் கிளிப்பிள்ளைபோலப் பலமுறை சொன்னாள். ஆனால் நான் வற்புறுத்திய பின்னர் தானே அந்தப் பேரிடியைத் தூக்கி என் தலைமீது போட்டாள்.

ஓரகத்தியின் உறவினரில் யாரோ இறந்துவிட்டார் என்று ஆள் வந்ததும், எல்லோரும் அங்கே புறப்படத் தயாரானார்கள். வீட்டையும் மாட்டையும் கவனித்துக்கொள்ள என்று என்னை மட்டும் விட்டுப்போயினர்.

''நாங்கள் போய் 'பால்'முடிந்ததும் வந்துவிடுவோம் வீட்டைப் பார்த்துக் கொள்'' என்று ஓரகத்தி சொன்ன போது என்மனம் துள்ளியது இன்று எப்படியும் செங்கமலக் கிழவியைக் கண்டு பேசிவிடுவது என்று.

எனவே சூழ்நிலை நன்கு அமைந்ததும் நான் நினைந்ததைச் செய்து முடித்தேன். இந்தச் சூழ்நிலை என்பதுதான் என்ன? மனிதனை—நல்ல நிலையில் நிறுத்துவதும் நிலைகலக்கிக் கீழ் இறக்குவதும் இதுவேயன்றோ? கல்வி கேள்விகளில் மிக்கு ஒழுக்கமுடையவர்களும் கால் வழுக்கி விழுவதுபோல் சில வேளை சூழ்நிலை அவர்களைக் கெடுத்துவிடுகின்றது. சறுக்கு நிலத்தில் நடக்க ஊன்றுகோல் தேவைப்படுவதுபோல் உறுதியான மனம் பெற்றிருப்பவர்கள் எந்தச் சூழ்நிலை எப்படி ஆனாலும் சரியாக நடந்து உயர முடியும்; ஆனால் தடுமாறும் உள்ளம் கொண்டவர்கள் அங்கங்கே தள்ளாடித் தள்ளாடி வீழ்ந்துபடுவர். என்ன செய்வது? என் வாழ்க்கையிலும் இப்படித் தள்ளாடி விழும் உறுதியில்லாதவர்களைச்

சந்திப்பேன் என்று நான் எண்ணவே இல்லை.

சின்ன வயது முதலே எனக்கு அந்தப் பிடிவாதம் உண்டு. என் மனம் நினைத்ததை இறுதிவரை மாற்றிக் கொள்ளாத வழக்கம் எனக்கு. என்னுடைய பலகையும் புத்தகமும் எவ்வளவு அழுக்காக இருந்தாலும் வகுப்பில் உள்ள மற்றொருத்தியினுடையதைக் கண்டு அதற்காக ஏங்கும் ஏக்கம் எனக்கு என்றுமே இருந்ததில்லை. என்னைப்போல் எல்லோரும் கிடைத்ததுகொண்டு மனம் அமைந்தால் நல்லதுதான். என்னைப்பற்றி உயர்வாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகச்சொல்லவில்லை. அப்படிஇருந்துவிட்டால் பூசலும் தொல்லையும் இல்லாமல் போகுமே என்பதற்காகச் சொன்னேன்.

அந்தச் செங்கமலக் கழவி சொன்னதும் நான் அதை நம்பவே இல்லை. அழுதேன். அரற்றினேன். "இல்லை பாட்டி இருக்காது இருக்காது" என்று தேம்பித் தேம்பிச் சொன்னேன், "நான் என்னடி அம்மா சொல்வேன்? உண்மை அதுதானே. ஊரே சொல்லுமே! உனக்கு நல்ல மனசு. உன்னைப்போல எல்லோரும் என்று நீ எண்ணுகின்றாய்" என்றாள் அந்தக் கிழவி.

நான் என்னென்னவோ நினைந்து நினைந்து ஆறுதல்கொள்ள முயன்றேன். என் மனம் ஒரு நிலைக்குவந்து அமைதியடைய இருக்கும் நேரத்தில், "இருக்குமோ" என்று எண்ணினால் போதும் கன்னங்களில் ஆறு ஓடும். நெஞ்சம் விம்மிவிம்மி அடங்கும்.

என் நிலையைக் கண்ட செங்கமலக் கிழவியும் பாகாய் உருகிவிடுவாள். "அழாதேடி அம்மா அழாதே—நினைக்காதே அதை எல்லாம் நல்லபடி நடக்கும். என்னமோ உன் வயிற்றில் ஒரு உயிர் வளருகின்றது. இனி அவன் திருந்திவிடுவான்" என்று பல வகையில் ஆறுதல் மொழி சொல்லிக்கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் அமைதிக்குப்பிறகு. கடல் மடை திறந்ததுபோல் அவளே பேசத் தொடங்கினாள்.

"தங்கம் உனக்கு ஒன்று சொல்லுவேன் கேள். போனது எல்லாம் போகட்டும்என்று அவனிடம் அதைப் பற்றி ஒன்றும் கேட்காதே. ஓகத்தியையும் பகைத்துக்கொள்ளாதே. விட்டுவிடு. இனிமேல் திருந்துவான்.

"முன்னே எல்லாம் எனக்குக்கூட நம்பிக்கை இல்லைதான். ஆனால் இப்போது மெல்ல மெல்ல நம்பிக்கை பலப்படுகின்றது"

"எப்போதோ ஒரு முறை அவன் இளமை முறுக்கில் அவளிடம் ஏமாந்துவிட்டான். அதற்காக அவன் பல முறை வருந்தி இருக்கிறான் என்பதனை நான் அறிவேன் அவன் நல்லவன் — மிகநல்லவன். ஆனால் அவள்தான் எல்லாவற்றிற்கும் காரணம். ஓரளவுக்கு உன் கணவனின் அண்ணனும் காரணம் எனலாம். முதலிலேயே அவன் கண்டித்திருக்கலாம். கண்டும் காணாததுபோல் இருந்துவிட்டான். அவன் எப்போதுமே அப்படித்தான். சிறு வயதில் கூட ஓடி ஆட உடலில் தெம்பு இல்லாமல் இருந்தான். எப்போதும் மூலையில் முடங்கிக்கிடப்பவன். அதற்குமேல் நான் என்னடி அம்மா சொல்வேன்.

இளையவன் ஒரு முறை அந்தப் பட்டணத்துக்காரியிடம் மயங்கிக் கெட்டுவிட்டபிறகு இடுக்கியில் சிக்கிய பொருள்போலாகிவிட்டான். அவன் நினைந்து நினைந்து தப்பித்துக்கொள்ளப் பார்த்தும் வழியில்லாது போயிற்று. அவள் ஆட்டிவைக்கும் படி எல்லாம் ஆடும் பாவையானான். கையும் காலும தூக்கத் தூக்கும் பொம்மைதான் அவன்.

சின்னவனுக்குத்திருமணம்முடித்துவிட்டால் தொல்லை விட்டுவிடும் என்று எவ்வளவோ முறை எவ்வாறோ முயன்றனர். ஒவ்வொரு முறையும் அவள் அதை எப்படியோ தடுத்துக்கொண்டே வந்தாள்.

ஒரு சமயம் அவள் நோய்வாய்ப்பட்டுச் சென்னையில் இருந்தபோது எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. உறுதிமொழிதலும் ஆயிற்று. அப்போதுதான் அவள் வந்தாள். வந்தவள் சேதியைத் தெரிந்துகொண்டு குதியாய்க் குதித்தாள். அப்போதெல்லாம் நான் இங்கே வரவும் போகவும் இருந்தேன். எல்வளவோ சொல்லிப்பார்த்தேன். கேட்பதாகக் காணோம்.

மாலை எல்லாம் கடுகடுத்த முகத்துடன் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள். இனி வழிக்கு வந்துவிடுவாள் என நானும் வீட்டிற்குப் போய்விட்டேன்.

அன்று நள்ளிரவு இருக்கும் உன் கணவன் வந்து "பாட்டி பாட்டி கொஞ்சம் வீடுவரை வந்துவிட்டுப்போ" என அழைத்தான். "என்ன? என்ன?" என்று பல முறை கேட்டேன்.

"என்ன சொல்வது பாட்டி அந்தப் பட்டணத்துக்காரியின் தொல்லை பெரிதாகப் போய்விட்டதே "எப்படியும் திருமணத்தை நிறுத்திவிடத்தான் வேண்டும். அப்படிச் செய்துகொள்வதினால் நான் செத்துப் போகிறேன். பிறகு நடக்கட்டும் என்று கிணற்றில் இறங்கிப் படிமீது உட்கார்ந்துகொண்டாள். மெல்ல அழைத்துவந்து வீட்டில் விட்டிருக்கிறேன். நீங்களே வந்து சொல்லுங்கள்" என்றார்.

நான் சொன்னதும் அவள் என்ன ஒப்புக்கொண்டாளா. எப்படியோ கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள் அவளைச் சமாதானம் செய்து திருமணத்தை முடித்துவிட்டால் பிறகு குடும்பம் சீர்பட்டுவிடும் என்று நினைத்தேன். திருமணம் ஆன பின் திருந்திவிடுவார்கள் என நான் நினைத்த நினைப்பு பொய்த்துப் போய் விட்டது. ஆனால் இன்னமும் இடம் இருக்கிறது. நீதான் உன் திறமையைக் காட்டவேண்டும்.

வேறு ஒன்றும் வேண்டாம். நீ தாயாகப் போவது அவனுக்கு தெரியுமா?' என்றாள்.

"தெரியாது பாட்டி. மூன்று மாதங்களாக அவர் என்னைக் காணுவதோ பேசுவதோ இல்லையே" என்றேன்.

போனது போகட்டும் நீ தாயாகப் போவதை அவன் தெரிந்து கொள்ள செய். பிறகு மனம் இளகிவிடுவான். இந்த ஆண்களைப்பற்றித் தெரிந்ததால்தான் சொல்லுகிறேன். தந்தையாவதில் அவர்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சி தாயாவதில் மகிழும் நம்மை விடவா என்று கேட்காதே.

"இனி அவன் வெளியில் போகும் போது உன் ஓரகத்தியை வெளியில் அனுப்பாதே" என்றாள்.

இது என்ன முடிகிற வேலையா என்று நான் அயர்ந்துவிட்டேன்.

செங்கமலக் கிழவி போனபின் அவள் சொன்னதை எல்லாம் நினைந்து பார்த்தேன்.

'உண்மையாக இருக்குமா?' என்ற வினா என் நெஞ்சில் நீங்காமல் நிலைத்துவிட்டது.

ஒருகணம் 'சே ஒருக்காலும் இருக்காது. அந்தக் கூனல் கிழவி ஏதோ பகை காரணமாக அப்படிச் சொன்னாள்' என எண்ணி ஆறுதல் அடைவேன்.

ஆனால் மறுகணமே என் மனம் 'ஏன் இருக்காது. உனக்கே அப்படி ஒரு ஐயம் எழவில்லையா?' என்று கேட்கும்.

ஓரகத்தியும் கணவரும் நடந்துகொண்ட வகை அதை உறுதிப்படுத்தும்.

உண்மையா இல்லையா என்பதை உறுதிப்படுத்தாமலே என் மனம் இரு பக்கங்களிலும் ஊசலாடிக்கொண்டிருந்தது.

(தொடரும்)

# அரோகரா! கோவிந்தா!!

இந்த வேடிக்கையை, என்ன காரணத்தாலோ, நாமும் சரியாகக் கவனித்ததில்லை, வைதீக நண்பர்களும் கவனித்ததாகத் தெரியவில்லை; நாள் தவருமல் இந்த வேடிக்கை என்னவோ நடைபெற்றுக்கொண்டேதான் இருக்கிறது.

*

வேடிக்கையானதுதான் என்ருலும் இதிலே புதைந்துள்ள பொருளை ஆய்ந்தறிந்தால், கால மாறுதலும், தம்மையும் அறியாமலேபலர் 'கருத்தை மாற்றிக்கொண்டிருப்பதையும் அறியலாம்; அறிந்த பிறகு சிலருக்கு ஆத்திரம்கூடப் பிறக்கக் கூடும்.

*

தீபதரிசனம் காண ஆண்டு தோறும் பக்தகோடிகள் திருவண்ணமலை செல்கிருர்கள். கார்த்திகைப் பண்டிகையின் பொருளற்ற தன்மையை விளக்கிவிளக்கிக்கூறுகிருேம், எனினும், பக்தகோடிகள், அண்ணமலையானைக் காணச் செல்கிருர்கள்; திருவண்ணமலையில் தீபதரிசனத்தன்று, அண்ணமலைக்கு அரோகரா என்ற முழக்கம் காது செவிடுபடக் கிளம்புகிறது; சுறுசுறுப்புமிக்க பக்தர்கள், அண்ணமலை செல்வதற்காகநடத்தும் இரயில்பிரயாணத்தின்போதேமுழக்கமிடுவர். தீபதரிசன விழாக்கிழமை முழுவதுமே, அண்ணமலைக்கு அரோகரா என்று முழக்கம் கேட்கும், பக்தர்கள் தாமும் பரவசமாகி, பிறரையும் பரவசமடையச் செய்யும் நோக்குடன் முழக்கமிடுகின்றனர். பாவம்போகும், பிறவிப்பிணிக்குமாமருந்தான அருள் கிட்டும் அரோகரா என்று முழக்கமிட்டால் என்று அவர்கட்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது; அரோகரா! அரோகரா, என்று முழக்கமிடுகிருர்கள்.

*

திருப்பதி, பக்தர்களை திரட்டிக் கொள்ளும் காந்த சக்தியை இழக்கவில்லை; பெருங்கூட்டம் கூடுகிறது; ஆண்டு முழுவதுமே பக்தர்கள் குவிகிருர்கள், என்ருலும் புரட்டாசி திங்களிலே, இலட்சக் கணக்கானவர்கள் ஏழுமலை ஏறி, திருமலையப்பனைத் தொழுகிருர்கள்; காணிக்கை கொட்டுகிருர்கள்; முடிதருகிருர்கள்;மொட்டை அடித்துக்கொள்கிருர்கள்; வீதியில் புரண்டபடி தொழுகிருர்கள்; வாயிலே தாள் குத்திக் கொள்கிருர்கள்; இப்படி வகைவகையாகத் தொழுதிடும் பக்தர்கள் யாவரும் **கோவிந்தா! கோவிந்தா!** என்று எழுச்சியுடன் கூவுகின்றனர்; திருப்பதியில் மட்டுமல்ல, தெருத்தெருவாக, வீடு வீடாகக்கூட! புரட்டாசித் திங்களில், இந்த**க்கோவிந்தா!கோவிந்தா!** என்ற முழக்கம், கேட்போருக்கு மண்டைக் குடைச்சலும், போடுவோருக்குத் தொண்டை எரிச்சலும் ஏற்படும் அளவுக்குக் கிளம்புகிறது.

*

அரோகரா! என்று பல்லாயிரவர் முழக்கமிடும்போது, ஆண்டவனுக்கு பிரியமான அருள் கிடைக்கத்தக்க, புனிதத்தொண்டு இது என்று நம்பித் தான் செய்கிருர்கள்.

*

தெரிந்தோ தெரியாமலோ, பிழைப்பை ஓட்டவேண்டும் என்பதற் காகவோ பேராசை காரணமாகவோ தாம் செய்த அக்ரமங்கள், அநியாயங்கள் ஆகியவற்றிஞலே கிளம்பக் கூடிய பாவம் தொலையும், 'அரோகரா' வால் என்று எண்ணுகிருர்கள்.

*

'கோவிந்தா' கூறுபவர்களின் நோக்கமும் இதுதான் — தம்மைக் கவனிக்காமலிருக்கும் ஆண்டவனிடம் முறையிடுவதாகவே எண்ணிக் கொள்கிருர்கள்.

*

அந்தந்த திருத்தலங்களுக்கும் திருவிழாக்களுக்கும் செல்லும்போது மட்டும் இவ்விதம் முழக்கமிடுவது என்றுகூட இல்லை, சமயம் கிடைக்கும் போதெல்லாம், 'அரோகரா'வும் 'கோவிந்தா'வும் கூறுகிருர்கள் — பகவானை பஜிப்பதாக நம்பிக்கொண்டு.

*

எனவே, **'அரோகரா" "கோவிந்தா"** என்ற இரு சொற்களும், புனிதம் பக்தி, ஆகியவற்றினை எடுத்துக் காட்டும், தூய சொற்கள் எனக்கொண்டுள்ளனர் என்பதுதான், பொருளாகிறது.

*

சிரிப்பு என்பது மகிழ்ச்சியையும், அழுகை என்பது துக்க நிலைமையையும், நடுக்கம் எனபது அச்சத்தையும் காட்டும் சொற்கள்; அதுபோலவே **அரோகரா — கோவிந்தா —** என்ற சொற்கள், பக்தியைக் காட்டும் சொற்கள்; அப்படித்தானே பொருள் கொள்ளவேண்டும்?

பக்தர்களின் அகராதித்துணையுடன் கூறுவதாஞல், இவை இரண்டும், **பவித்திரமான சொற்கள்!**

*

அரோகரா! கோவிந்தா! என்று முழக்கமிடும் பக்தர்கள், முகமே புதிய கோலம் கொள்வதுண்டு. இந்த விதம் பஜிக்கும்போது, இப்படிப்பட்ட, தூய்மை, பக்தி, இவைகளைக் குறிப்பதும், அருள்பெறும் முறை என்று அமைந்துள்ளதுமான, இந்த இரு சொற்களும், மக்களால் பக்தர்களாலேயேகூட, சாதாரணமாக, எப்படி எப்படிப் பயன்படுத்தப் படுகிறது என்பதைப் பார்த்தால், வேடிக்கை புலப்படும்.

ஊர் கண்டு மிரள வாழ்ந்தான் உலகநாதன், நடந்தே செல்லமாட்டான்; காலைக் கடனை முடிக்கச் செல்வதற்குக் கூடக் கார் ஏறி, ஊர்க்கோடியில் அதெற்கெனப் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள தன் தோட்டத்துக்குச் செல்லுவான் என்ருல் ஆடம்பரம் பிறவற்றில் எப்படியெல்லாம் இருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை. கப்பல் வியாபாரம். இலட்சக் கணக்கான இலாபம். அவன் செல்வத்தைக் கண்டு, செருக்கினைச் சகித்துக் கொண்டிருந்த மக்கள், அவனிடம் தமக்கிருந்த அச்சத்தைக் குழைவு ஆக்கிக் காட்டினர், அரு

---

## பிறப்பு

*மறைந்த ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் மகள் மங்கையர்க்கரசி ஒரு ஆண் மகவுக்குத் தாயாஞர்கள் என்ற செய்தி கேட்டு மிக மகிழ்கிருேம்.*

வருப்பை மறைத்துக்கொண்டு பழகினர். ஏதோ ஓர் நெருக்கடி வந்துற்றது, நொடித்துப் போனான்; கப்பல் மூழ்கி விட்டது; கடனாளியாகிவிட்டான்; அப்போது, அவனைப் பற்றி மக்கள்என்ன பேசிக்கொள்கின்றனர்? "தெரியுமா! தெரியுமா! உலகநாதன் அரோகரா!!—ஆகிவிட்டான்" என்கிறார்கள்.

✻

உலகநாதன், வாணிபம் கெட்டது, செல்வம் இழந்தான், சீர் இழந்தான், அந்தஸ்த்து அழிந்தது, வக்கற்றவனானன், வகை கெட்டொழிந்தான் — அவன் அவ்விதம் அழிந்தொழிந்ததை, விரிவாக, விளக்கமாகக்கூறுவதற்குப் பதில் இரத்தினச் சுருக்கமாக மக்கள், அவன் அரோகரா. ஆகிவிட்டான் என்கிறார்கள்.

✻

அண்ணாமலையானுக்கு அரோகரா என்று கூறினர், பக்தியுடன்; அந்த அரோகரா என்ற சொல்லின் சக்தியே தமக்குச் சகல சித்திகளையும் பெற்றுத் தரும் என்று நம்புகின்றனர்; ஆனால், உலகநாதன் உருக்குலைந்து போனான், உள்ள செல்வம் ஒழிந்தது என்றதும், உலக நாதன் வியாபார விஷயம் தெரியுமா? அரோகரா ஆகிவிட்டான் என்று கூறுகிறார்கள்.

அப்படிக் கூறுபவர்கள், அடுத்த ஆண்டே கூடத் திருவண்ணாமலை செல்லக்கூடும்,அண்ணாமலையானுக்கு அரோகரா! என்று பக்தி முழக்கமிட. இங்கே அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்தில், எதை விளக்கிட அந்த அரோகராவைப் பயன் படுத்தினர்? ஒருவன் கெட்டழிந்ததைக் குறிக்கப் பயன் படுத்துகிறார்கள்.

✻

தேன் போலக் கசப்பாக இருந்தது தேமாங்கனி!—என்று சொல்ல முடியுமா? சொல்வதில்லை. ஏன்? தேன் என்றாலே இனிமை என்பது விளங்கி விடுகிறது;—அரோகரா என்ற சொல், அவ்விதம் இல்லை; பக்திப் பெருக்கைக் காட்டும் முழக்கமுமாகிறது, ஒருவன் ஏமாந்து கெட்டொழிந்ததைக் காட்டும் குறிச் சொல்லும் ஆகிறது. ஏன்?

✻

கோபால்தாஸ், முன்பு கோபாலப் பிள்ளைதான். நாலு காசு சேர்ந்ததும் நடை உடை பாவனைகளை மாற்றிக் கொண்டு, கோபால்தாஸ் என்று, வட நாட்டுப் பாணியில் பெயர் சூட்டிக் கொண்டு, வட்டி வியாபாரம் நடத்தி, இலட்சாதிப் பிரபு ஆகிறான். கோடீஸ்வரன் ஆகவேண்டும் என்ற ஆசை மனதைக் குடைகிறது; குறுக்கு வழி செல்கிறான் பொருள் திரட்ட; சிக்கிக் கொள்கிறான்; வழக்கு,அவன் சேர்த்து வைத்திருந்த பணத்தைக் கரைத்து விடுகிறது; வறியவனாகிறான்; அப்போது, அவனைக் குறித்து மக்கள்—பக்தர்கள் உட்பட—கூறுவது, அவன் 'கோவிந்தா' ஆகிவிட்டான்!—என்பது; ஏன்?

செத்தான் என்பதையே கூட ஆசாமி "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூறுகிறார்கள்!!

✻

அரோகரா! கோவிந்தா! என்ற சொற்கள், அருள் பெற்றுத் தரத்தக்க புனிதம் வாய்ந்தவை என்ற நம்பிக்கை ஆழ்ந்ததாகவும், பொருள் உள்ளதாகவும் இருந்திருந்தால், கெட்டுப்போன நிலையை, வீழ்ச்சி ஏற்பட்ட சம்பவத்தை, அழிந்து போனதை அறிவிக்கும் போது, அதே புனிதச் சொற்களை, அரோகராவை கோவிந்தாவைப் பயன்படுத்துவார்களா? இப்போது, கேட்டால் கோபம் வரும்; ஆனால் ஒவ்வொருவரும், இவ்விதம், அரோகராவையும் கோவிந்தாவையும் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

✻

என்ன சுல்தான்! கபார்கான், அல்லாஹோ அக்பர்ஆகிவிட்டானமே என்று முசுலீம்கள் பேசுகிறார்களா? இல்லை.

என்ன டேவிட்! ரிச்சார்டு சபாத் ஆகிவிட்டானமே, என்று கிருஸ்தவர்கள் பேசுவரா? காணோம். ஆனால் இங்கு, இடிபட்டு மிதிபட்டு, இருப்பதை இழந்து இளித்தவாயராகிக் கொண்டேனும், அண்ணாமலை செல்வோரும், ஏழுமலை ஏறி இறங்கும் பக்தர் கூட்டமும், கெட்டுவிட்டான், ஒழிந்துவிட்டான், அழிந்துவிட்டான் என்பதைக் குறிப்பிடுவதற்குப் பயன் படுத்தும் சொற்கள், தூய்மைக்கும் பக்திக்கும், அருள் பெறுவதற்கும் உகந்தன என்று பூரித்து அவர்களே கூறும், அதே அரோகரா! அதே கோவிந்தா! இந்த வேடிக்கைக்கு, என்ன விளக்கம் தருகிறார்கள்?

✻

பகவானுடையதிருப்பாதம்,திருநாமம். அதை நெற்றியில் அணிந்துகொள்வது, நாம் பகவானுடைய அடியார்கள் என்பதை எடுத்துக்காட்டும், பக்திச் செயலாகும் என்று கூறுகின்றனர், திருநாமம் தரிப்போர்.

பைத்யக்காரர்களே! திருநாமம் தரித்துக்கொள்வது என்பதை நமது பெரியவர்கள், விசேஷமான விஞ்ஞான அறிவோடுதான் ஏற்பாடு செய்தார்கள். திருநாமம், தரித்துக் கொள்வதால், நெற்றியிலே இருக்கும் சில நரம்புகளுக்கு ஒரு விதமான 'டானிக்' கிடைக்கிறது; அதன்பயனாக மூளைக்கே சுறுசுறுப்பு கிடைக்கிறது என்று கூடப் பேசுவோர் உளர். தெரியாமலா தேசிகாச்சாரியார் திருநாமம் தரித்துக்கொள்கிறார், அவர்


அக்டோபர் முதல் மாத ஏடாக வெளிவருகிறது

அக்டோபர் இதழ் 15-ஆம் தேதியில் எங்கும் கிடைக்கும்

தென்றல் திரை

20 பக்கங்கள் :: 4 அணா

மாதந்தோறும் 15-ஆம் தேதியில் வெளிவரும்.

அறிஞர் அண்ணா அவர்களின் சிறப்புக் கட்டுரை விரைவில் வெளிவரும்.

ஏஜண்ட் இல்லாத ஊர்களுக்கு முன்பணத்துடன் விண்ணப்பிக்கவும்.

தென்றல் திரை,
34, சர் தியாகராய ரோட்,
தி. நகர், :: சென்னை-17.

P. P. பத்மநாபன்,
உரிமையாளர், & நிர்வாகி.

என்ன தெளிவில்லாதவரா, சுருளி மலை கொலைக்கேசை நடத்திப் பெரும் புகழ் பெற்றவர்; திருநாமம் தரித்துக் கொள்வதாலே புத்தி தீட்சணியம் ஏற்படுகிறது என்பதை, வெள்ளைக் கார ஜட்ஜிகளிடமே எடுத்துப் பேசி, அவர்களே ஒப்புக்கொள்ளும்படி செய்திருக்கிருர் என்று பேசி, தம் அளவில், தேசிகாச்சாரியாகப் பார்ப் போரும் உள்ளனர்.

*

இந்த அளவுக்கு வாதாடத்தெரியா விட்டாலும், 'திருநாமம்' தரித்துக் கொண்டால்தான் 'களை 'இருக்கிறது, 'மங்களகரம்' ஏற்படுகிறது; இல்லை யானுல் நெற்றி பாழ்க்கோலம் காட்டு கிறது என்றுகூற திருநாமம் தரிப் போர் அனைவருக்குமே தெரியும்.

பகவானுடைய திருப்பாதத்தை, நெற்றியில் தரித்துக்கொள்வதாலே, அருளைப் பெறுகிறோம்—நெற்றியிலே அது இருப்பதாலே குத்துகிறதா? குடைகிறதா? பாரமா? என்ன நஷ்டம் அதனுலே? இவ்வளவு சாமான்ய மான காரியத்தாலே, பகவானுடைய அருளைப்பெற முடியும் என்று தெரி கிற பொழுது அதைச் செய்வதாலே, ஏனய்யா கிளறிக்கிளறிக் காரணம் பார்க்கவேண்டும், என்று அடித்துப் பேசும், அடியவர்களும் உள்ளனர்.

*

பொதுவாக அவர்கள் அனைவர் மனதிலும், நாமம் தரித்துக்கொள் வது, புண்ய காரியம், அருள் பெறும் மார்க்கம், பகவானுக்குப் பிரியமானது என்ற எண்ணம் இருக்கிறது.

*

கந்தசாமி, கரம்பாக இருந்த நிலத்தை, காண்ட்ராக்டிலேகண்மண் தெரியாமல் இலாபம் சம்பாதித்து பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் எதெதற்கோ செலவிட் டுக்கொண்டு.ந்த ஏகாம்பரத்திடம், சரியான இ...பத்துடன் விற்றுவிட் டான்.

"தெரியுமா? தெரியுமா? கந்தசாமி, ஏகாம்பரத்துக்கு, நன்ருகக்குழைத்து, பட்டை **நாமம் போட்டனுப்பி விட்டான்"** என்று கேலி செய் கிருர்கள்.

**நாமம் போடுவது** என்பது, ஏமாற்றிவிட்டான் என்பதைக் குறிக் கிறது—இங்கு.

*

"நல்ல பக்திமான்! முகத்திலே எப்போதும் இலட்சுமிகரமாக, திரு நாமம் பளிச்சென்று இருக்கும்" என்று பேசுகையில், திரு நாமம் தரித் துக்கொள்வது, சிலாக்கியமான காரி யம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனுல் அதே 'நாமம்' ஒருவன் மற் ருெருவனை ஏய்த்துவிடுவதையும் ஒரு வன் மற்ருெருவனிடம் ஏமாந்து போவதையும் குறிக்கப் பயன்படு கிறது! முட்டாள் தனத்துக்கு 'நாமம்' அடையாளமோ, என்று கேட்கத் தோன்றும் சரியானபடி குழைத்துப் போட்டான் பட்டை நாமம் என்று பேசுவது கேட்கும்போது.

தத்துவ ரீதியாகப் பேசும்போதோ, திருநாமம் தரித்துக்கொள்வது திரு மாலின் அருளைப் பெறுகிற வழி என்று உபதேசிக்கப்படுகிறது.

*

இதே முறையிலேதான், ஒருவன் மற்ருெருவனை ஏமாற்றிவிடுகிருன் என்பதைத் தெரிவிக்கும்போது, **"மொட்டை அடித்துவிட்டான்"** என்று கூறுகின்றனர்.

'அரோகரா' ஆகிவிட்டான், 'கோவிந்தா' ஆகிவிட்டான், நாமம் போட்டுவிட்டார்கள், மொட்டை அடித்துவிட்டார்கள்—என்ற சொற் கள் கேவலத்தைக் குறிக்கப் பயன் படுத்தப்படுகின்றன.

அரோகரா! என்று கூறும் போது ஐயன் அகங்குழையும், அருள் சுரக்கும் என்று மற்றவர் களுக்குக் கூறுகிறோமே, அதே சொல்லை ஒருவன் கெட்டொழிந்த தைக் குறிப்பிட, கேலி பேசப் பயன் படுத்துகிறேமே, இது சரியா? என்று யோசிப்பவர் உண்டா? கிடையாது! ஏன்? வேடிக்கை அதிலேதான் இருக் கிறது! அரோகரா! கோவிந்தா! என்று ஓசை கிளப்புகிருர்களேதவிர, எவரேனும் ஏன் என்று கேட்டால், கேட்போரின் வாயை அடைக்க, ஏதேதோ தத்துவார்த்தம் பேசுகிருர் களே, தவிர, அவர்களுக்கே ஆழ்ந்த நம்பிக்கையோ, பொருள் அறியும் தெளிவோ இருப்பதில்லை! ஏமாளித் தனத்தை—சீர்கெட்டுப்போகும் நிலை யைக் காணும்போது, அவர்களுக்கு, சிரமமின்றி, சுவையுடன், சுரந்து கொண்டு அரோகராவும் கோவிந்தாவும் கிளம்புகின்றன!

இந்த நிலை, இன்று நேற்றல்ல, நீண்டகாலமாக இருந்து வருகிறது.

நீண்ட காலமாகவே, அரோகரா— கோவிந்தா — நாமம் போட்டான்— மொட்டை அடித்தான்—என்ற சொற் கள், கேலியை வெளிப்படுத்தப் பயன் பட்டு வருகின்றன. ஏன் என்று பக் தர்களும், மற்றவர்களும், எண்ணிப் பார்க்க வேண்டும். ஆராய ஆராய, வேடிக்கை புலப்படும்; நமது பக்தர் களின் 'நம்பிக்கை' எந்த அளவுக்கு காற்றில் பறக்கும் தன்மையினதாக இருக்கிறது என்பதும் விளங்கும்.

★

*3-ம் பக்கத் தொடர்ச்சி*

இந் நிலையில், தமிழகத்தில் ஒரு நல்ல எதிர்க் கட்சி அமைக்கும் வாய்ப்பு, அவருக்குக் கிடைத்திருந் தும், உருவாகாமற் போய்விட்டது.

ஒரு எதிர்க்கட்சியை உரு வாக்கும், வாய்ப்பும், வசதியும்பெரியா ரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அள வுக்கு,தமிழகத்தில்வேறுஎந்தத்தனிப் பட்ட தலைவருக்கும் இதுநாள் வரை யில்தரப்பட்டதில்லைஎன்பதை எவரும் மறுத்திடார் என்று நம்புகிருேம்.

அந்த வாய்ப்பு, கனியாமற்போனது ஜனநாயகத்துக்குப்பெருநஷ்டம், தமி ழகத்துக்கே ஈடு செய்ய முடியாத நஷ்டம்.

பெரியாரின் பேராற்றல் நமக்கு உண்டுஎன்ற ஆணவமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தை இயக்க வைத்துக் கொண்டிருப்பது! அவர் எக்காரணத்தாலோ, செய்யாதுவிட்ட அந்தப் பணியினைச் செய்து பார்த்திட முயற்சிப்போம், என்ற அடக்க உணர்ச்சியுடனேயே, தி. மு. க. பணி யாற்றி வருகிறது.

எதிர்ப்பும் இடர்ப்பாடும், நெருக்கடி யும் நெஞ்சதிர்ச்சியும், நிரம்ப!

எனினும், இந்தத் தேர்தலிலும் ஈடு பட்டாக வேண்டும் என்று தி. மு. க. செயல்பட முனைந்திருப்பதற்குக் கார ணம், எதிர்க் கட்சி ஒன்று உருவாக வேண்டும் என்ற கடமை உணர்ச்சி யினுலேதான்.

இந்த நேரத்தில், பல்வேறு முனை களிலிருந்தும், எதிர்க் கட்சி என்பது பற் றிய கருத்துகள் கிளம்பியிருப்பது கண்டு மகிழ்கிருேம்.

நாட்டு மக்கள் மிக நன்ருக எண் ணிப் பார்க்கவேண்டிய பிரச்சினை இது; சாதாரண மக்கள், சாமான்யர் கள், நாம், எண்ணிப்பார்க்கவேண்டிய பிரச்சினை, எதிர்க்கட்சியின் இலக் கணம் என்ன என்பதுபற்றிய பிரச்சினை.

★

# சூயஸ்

## அமெரிக்க திட்டம்

சூயஸ் சிக்கல், போராக மாருதிருப்பதற்காகச் செய்யப்பட்டு வரும் சமரச முயற்சிகளில், இப்போது, அமெரிக்க முயற்சி ஒன்றுக்கு 'மவுசு' அதிகமாகி வருவதாகத் தெரிகிறது.

சூயஸ் கால்வாய் அபிவிருத்திக்காக, அமெரிக்க கப்பல் வாணிபம், எண்ணெய் வாணிபம் நடத்தும் 'பெரிய புள்ளிகளுடன்' கலந்து பேச, சூயஸ் கால்வாய் நிர்வாகி, டாக்டர் பாதாவி அமெரிக்கா வந்திருக்கிருர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அமெரிக்கா ஒரு சமரச திட்டத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்படும் நிலை இருப்பதால்—அதைக் கவனிக்க, ஈஜிப்ட்டின் வெளி விவகார மந்திரி டாக்டர் பால்ஜீ வந்திருக்கிருர்.

அவருடைய போக்கில் சமரச உணர்ச்சி மிகுந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சமரசம் காண, நேரடியான பேச்சுவார்த்தைகள் நடத்த, ஈஜிப்ட் தயார் என்று நாசர் தெரிவித்திருப்பது, அமெரிக்காவின் நம்பிக்கையை அதிகமாக்கி இருக்கிறது.

பிரிட்டனுக்கும் ஈரானுக்கும், முன்பு மூண்ட தகராறின்போது, அமெரிக்கா, தக்க சமயத்தில் தலையிட்டு, சிக்கலைத் தீர்த்து இரு தரப்பினருக்கும் மனத்தாங்கல் இல்லாதபடி செய்தது போல, சூயஸ் பிரச்சினையிலும் வெற்றிகரமாகச் சமரசம் செய்ய இயலும் என்ற கருத்து பலம் பெற்று வருகிறது.

அடுத்த 15 ஆண்டுகளில் சூயஸ் கால்வாய் அபிவிருத்திக்கு ஆயிரமாயிரம் கோடி டாலர்கள் தேவைப்படுமாம்.

எவ்வளவு பெருந்தொகையானலும், தந்து உதவவும், அந்த உதவிக்கு ஈடாக, சூயஸ் கால்வாய் நிர்வாக மேற்பார்வையை, ஈஜிப்ட்டின் தேசிய சுயமரியாதைக்குக் குந்தகமில்லாத வகையில் கவனித்துக் கொள்ளவும், அமெரிக்க எண்ணெய் வாணிபக் கம்பெனிகள் தயாராக உள்ளனவாம்.

ஈஜிப்ட்டின் உடைமையான சூயஸ் கால்வாயின் நிர்வாகத்தில், அன்னிய நாடுகளின் தலையீடு, ஆதிக்கம், ஆகியவை புகுத்தப்படுவதுதான், ஈஜிப்ட்டின் தேசிய சுயமரியாதைக்குப் பங்கம் என்று கூறலாம்; தனிப்பட்ட வாணிபக் கம்பெனிகள், பெரும் பொருளை உதவியாக அளித்து, அதன் காரணமாக, நிர்வாக மேற்பார்வையில் ஈடுபடுவது, எந்த விதத்திலும் தாழ்நிலையாகிவிடாது என்று கெய்ரோ வட்டாரத்துக்கு அமெரிக்க வணிகக் கம்பெனிகள் எடுத்துரைத்துள்ளன.

ஈரானில், எண்ணெய்க் கிணறுகள், பிரிட்டிஷ் நிர்வாகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, தேசிய உடைமை ஆக்கப்பட்டன.

சமரச ஏற்பாட்டின்படி. பல்வேறு நாடுகளிலுள்ள 8 பெரிய கம்பெனிகள், ஈரான் எண்ணெய்க் கிணறுகளின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்கின்றன.

இதே முறையில். சூயஸ் பிரச்சினைக்கும் சமரச ஏற்பாடு இருக்கலாம் என்று பேசப்பட்டுவருவதுடன், இந்த யோசனைக்கு ஆதரவு வளருவதாகவும் தெரிகிறது.

சூயஸ் பிரச்சினை சம்பந்தமாக, நேரு பண்டிதரின் போக்கு, விபரீதமாக இருக்கிறது என்று டாக்டர் லோஹியா கூறியதாக வெளிவந்த செய்தி பெருத்த பரபரப்பை உண்டாக்கி வைத்திருக்கிறது.

நாசரின் நடவடிக்கையைக் கண்டித்து, நேரு, டிட்டோவுக்குக் கடிதம எழுதியதாகக் கூறப்படுவது உண்மையாகஇருக்குமானுல், இது சர்வதேச அரங்கில் நேருவுக்கு உள்ள மதிப்பையே பாதிக்கக் கூடியதாகிவிடும்.

டாக்டர் லோஹியா வெளியிட்டுள்ள திடுக்கிடும் செய்திக்கு, நேரு சர்க்கார் எந்தவிதமானபதில் அளிக்கப் போகிறது என்று அறிய பொதுமக்கள் ஆவலாக உள்ளனர்.

சூயஸ் கால்வால், ஈஜிப்டின் உடைமைதான், அதன் நிர்வாகம், ஈஜிப்டின் உரிமைதான் — அதை யாரும் மறுப்பதற்கில்லை—ஆனுல், சூயஸ் கால்வாய் கம்பெனியை, நாசர் தேசிய உடைமையாக்கிய முறை சரியல்ல என்ற கருத்துப்பட நேரு பண்டிதர் வெளிப்படையாகக் கூறியிருப்பது, ஈஜிப்டுக்கு ஆதரவு தரும் பேச்சு அல்ல, என்பதற்கு விளக்கம் தேவையில்லை.

பிரிட்டனும் பிரான்சும்கூட, சூயஸ் ஈஜிப்டின் உடைமை என்பதையோ, அதன் நிர்வாக உரிமை ஈஜிப்ட்டுக்கு உண்டு என்பதையோ மறுக்கவில்லை; ஆனுல் சூயஸ் கம்பெனியைத் தேசிய உடைமையாக்குவதில் நாசர் கையாண்ட முறையையும், அதைத் தொடர்ந்து அவர் எடுத்துவரும் நடவடிக்கைகளையும்தான் கண்டிக்கின்றன.

பண்டித நேருவின் பேச்சு, இந்தப் போக்குக்கு ஆதரவு தருவவாக அமைந்திருக்கிறது.

இவ்வளவு தொல்லைப்படுவானேன்—சூயஸ் பிரச்சினையில் சமரசம் உண்டாக்கிவைக்க, நாம் இப்படி ஆர்வம் காட்டிக்கொண்டு, தலையிட்டுக் கொண்டு திரியத் தேவையில்லை — இந்தப் பிரச்சினையை, அமெரிக்காவும், ரஷியாவும், அக்கரை காட்டித் தீர்த்துக் கொள்ளலாம், நாம் ஏன் வீண் தொல்லைப்படவேண்டும் என்று ஆச்சாரியார் கூறியிருக்கிருர்.

மேற்கு வல்லரசுகள் பொதுவாக அமெரிக்காவின் பாதுகாப்பை எதிர்பார்த்து நிற்கின்றன. என்பதும் மேற்கு வல்லரசுகள் ஆதிக்க கோலம் கொள்ளும்போது அதைத் தடுக்கும் வல்லமை ரஷியாவிடமே இருக்கிறது என்பதும், உலகறிந்த உண்மை.

எனவே, சூயஸ் விஷயமாகவும், அமெரிக்காவும் ரஷியாவும் அக்கரை காட்டி, ஒரு சமரச ஏற்பாடு செய்துவைக்கட்டும்—என்று ஆச்சாரியார் சொல்வதிலே சூட்சமம் இல்லாமற் போகவில்லை.

அமெரிக்காவின் புதிய முயற்சி—சர்க்கார் தரப்பிலிருந்து வரவில்லை என்ருலும் — சமரசத்துக்கு வழி கோலக் கூடும் என்று தெரிகிறது.

ஈரான் சம்பந்தமாக ஏற்பட்ட "எட்டுக் கம்பெனிகளின் கூட்டு வாழ்க்கை" திட்டத்தை ரஷியா மறுக்கவில்லை.

இப்போது, அதே முறையில், சூயஸ் விஷயமாக ஒருஏற்பாடு உருவானுலும் ரஷியா எதிர்க்காது என்ற நம்பிக்கையுடனேயே, சமரச ஏற்பாடு உருவாகிக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. ஆனுல், ஈஜிப்ட் துரைத்தனப் பிரமுகர்கள் எவ்வித ஏற்பாடும் தமக்குப் பிடிக்காது என்று பேசுகின்றனர்; இரு தரப்பினரும் மோதலைத் தவிர்க்க இதுபோன்றதோர் சமரச ஏற்பாட்டுக்குத்தான் இறுதியில் வந்தாக வேணடும் என்ற கருத்து எங்கும் இருக்கிறது. ★

# மலாய் நாட்டில் இராமசாமி

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி தம் நாடகக் குழுவினருடன், மலாய் நாடு சென்று, கடந்த ஒரு திங்களுக்கு மேலாக நாடகங்களை நடத்தி, ரசிகர்களின் நன்மதிப்பைப்பெற்று வருகிறார்.

**மனோகரா, துளிவிஷம், வேலைக்காரி, ஓர் இரவு, சந்திரமோகன், ஆகிய நாடகங்கள், சிங்கப்பூர்** மலாக்கா, கோலாலம்பூர், ஈப்போ, பினங்கு, கிள்ளான் ஆகிய பல்வேறு நகரங்களில் திரும்பத்திரும்ப நடத்தப்பட்டு வருவதால், 20-நாடகங்கள் மட்டும் நடத்துவதாகத் திட்டமிட்டுச் சென்றவர், மேலும் பல நாட்கள் அங்கு தங்கவேண்டி நேரிட்டுவிட்டது.

பெருங்கூட்டம் கூடுகிறது என்றும், வசதிக் குறைவுகளையும் பொருட்படுத்தாமல், நாடகங்களை மக்கள் ரசித்து மகிழ்கிறார்கள் என்றும், மலாய் நாட்டு ஏடுகள் எழுதுகின்றன.

நீக்கப்பட்டிருந்தும், திராவிடநாடு இதழுக்கு மட்டும் இன்னும் தடை இருந்து வருகிறது.


இந்தக் குறையை நீக்க, கே. ஆர். இராமசாமி அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக மலாய் நாட்டு முதலமைச்சர் துங்கு ரஹ்மான் அவர்களை, கே. ஆர். இராமசாமி அவர்கள் பேட்டி கண்டு பேசினார். முதலமைச்சர் இது விஷயமாகக் கவனித்து ஆவன செய்வதாக வாக்களித்திருக்கிறார் என்று அறிகிறோம்.

கே. ஆர். இராமசாமி அவர்கள் மலாய்முதலமைச்சர் துங்கு ரஹ்மான் அவர்களை பேட்டி கண்டபோது எடுத்த படம்—இங்கு காணப்படுவது.

இதுபோன்றேசிங்கப்பூர் முதலமைச்சர் லிம்யூ ஹாக் அவர்களையும், சந்தித்துப் பேசியிருக்கிறார்.

நாடக நிகழ்ச்சியுடன் மட்டுமின்றி, மலாய் நாட்டிலே வாழும் தமிழர்களின், பல்வேறுஸ்தாபனங்களின் வரவேற்புக்கூட்டங்களில் கலந்து அளவளாவிதமிழகத்தின், நிலைமையை அவர்கட்குஎடுத்துக் கூறும் பிரசாரத்திலும்நடிப்பிசைப் புலவர் ஈடு பட்டிருப்பது கேட்க மகிழ்ச்சி ஏற்படுகிறது.



கே. ஆர். இராமசாமியை வரவேற்று நடத்தப்படும், விருந்துபசாரங்களில் மலாய் நாட்டு துரைத்தனத்து பிரமுகர்கள் கலந்து கொண்டு, பெருமை அளித்திருக்கின்றனர்.

"நான் மலாய் நாட்டில் இருந்து, பணம் சம்பாதித்துக் கொண்டு போவதற்காக வரவில்லை. நாடக மூலம் நாட்டுக்குத் தேவையானநல்ல கருத்துக்களைப் பரப்பவும், இங்குள்ள தமிழர்களின்நட்பைப் பெறவுமே வந்திருக்கிறேன்" என்று கே. ஆர். இராமசாமி, ஒரு வரவேற்பில் உருக்கமாகக் கூறியிருக்கிறார்.

பல்வேறு சங்கங்கள், தோழர் இராமசாமிக்கு வரவேற்பளிப்பதில் பெருத்த உற்சாகம் காட்டி, வருகின்றன.

குறிப்பாக, மலாய் நாட்டில், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டும், கே. ஆர். இராமசாமியைவரவேற்று உபசரிப்பதில் பேதமின்றி ஈடுபட்டுள்ளன என்று அறிந்து பூரிக்கிறோம்.

மலாய் நாட்டின் பல பகுதிகளில் திராவிடர் கழகம், நடிப்பிசைப் புலவருக்கு நல்ல வரவேற்பு அளித்திருக்கிறது.

மலாய் சர்க்கார் 'திராவிட நாடு' இதழுக்குத்தடை விதித்து, ஆண்டு மூன்றுக்கு மேலாகிறது.

தமிழ் இளைஞர்களை, கம்யூனிஸ்டுகள் என்ற காரணம் காட்டி மலாய் சர்க்கார் தூக்கிலிட்டதைக் கண்டித்து, 'திராவிடநாடு' தலையங்கமும், கட்டுரைகளும் எழுதியது கண்டே, மலாய் சர்க்கார் தடை விதித்தனர்.

அதே காரணத்துக்காகத் தடை விதிக்கப்பட்டிருந்த வேறு தமிழ் இதழ்களுக்கெல்லாம், தடை

தோட்டத் தொழிலாளர்களாக இருந்து வரும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கே. ஆர். இராமசாமியின் நடிப்புத் திறத்தைக் கண்டு பாராட்டுவதுடன், அவருடைய நட்பு உள்ளம் கண்டு மகிழ்கிறார்கள் என்று அறிகிறோம்.

தமிழ்க் கலையின் மேம்பாட்டினையும, தமிழரின் பண்பாட்டினையும், பரப்பும், நற்பணியில் ஈடுபட்டுள்ள நமது நண்பரைப் பாராட்டுகிறோம்.

மலாய் நாட்டிலுள்ள தமிழர்களுக்கு தாயகத்தின் பரிவு, கே. ஆர். இராமசாமி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப் பெருமைக்குரிய காரியத்தில் ஈடுபட்டுள்ள கே. ஆர். இராமசாமியை நாம் வாழ்த்துகிறோம்.

★

காஞ்சீபுரம் 95, திருக்கச்சிநம்பி தெரு திராவிடநாடு அச்சகத்தில்